# උක් පර්යේෂණ ආයතනය
# கரும்பு ஆராய்ச்சி நிலையம்
# Sugarcane Research Institute

## වාර්ෂික වාර්තාව
## ஆண்டறிக்கை
## Annual Report 2010





# கரும்பு ஆராய்ச்சி நிலையம்


**தலைமை ஆராய்ச்சி நிலையம் - உடவளவை**

தொலைபேசி : +94473328133 , 94472233285

தொலைநகல் : +94472233233

மின்னஞ்சல் : info@sugerres.lk

இணையத்தளம் : www.sugerres.lk

**உப காரியாலயம்**

தெலவல வீதி, இரத்மலானை

தொலைபேசி : +94112605759

தொலைநகல் : +94112605236

**தலைவர்**

தொலைபேசி: +94112607161

தொலைநகல் : +94112605145

**பணிப்பாளர் மற்றும் தலைமை நிறைவேற்றதிகாரி**

தொலைபேசி: + 944 72 233 282

கௌரவ அமைச்சர்
சிறு ஏற்றுமதிப் பொருட்கள் மேம்பாட்டு அமைச்சு
கமற்றொழில் நிலையம்
5/80, ரஜமல்வத்த
பத்தரமுல்ல

கௌரவ அமைச்சர் அவர்களே,

**2010.01.01 ஆம் திகதி முதல் 2010.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்காக கரும்பு ஆராய்வு நிலையத்தின் வருடாந்த அறிக்கை**

கரும்பு ஆராய்வு நிலைய ஆளுகை குழு சார்பில் 2010.01.01 ஆம் திகதியில் இருந்து 2010.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்காக கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் வருடாந்த அறிக்கையினை இத்தோடு மிக மகிழ்ச்சியுடன் அர்ப்பணிக்கின்றேன்.

இப்படிக்கு, நம்பிக்கையுடனான
கரும்பு ஆராய்ச்சி நிலையம்

எஸ்.கே.சிறில்
தலைவர்
கரும்பு ஆராய்வு நிலைய ஆளுகை சபை

# உள்ளடக்கம்

**பக்கம்**


| | |
|---|---|
| தூரநோக்கு | 1 |
| செயற்பணி | 1 |
| குறிக்கோள் மற்றும் எதிர்கால தோற்றம் | 1 |
| ஆளுகை சபை | 2 |
| தலைவரின் செயலாற்றுகை மீளாய்வுக்கூற்று | 3 |
| பணிப்பாளரின் அறிக்கை | 5 |
| பிரிவுகள் சார்ந்த அறிக்கைகள் | 7 |
| பயிர் இனவிருத்தி பிரிவு | 9 |
| பயிரியல் பிரிவு | 13 |
| இரசாயனயியல் பிரிவு | 17 |
| பூச்சிபீடை கட்டுப்பாட்டுப் பிரிவு | 19 |
| நுண்ணுயிரியல் மற்றும் துணை விளை பொருள் உற்பத்திப் பிரிவு | 23 |
| பொறியியற் பிரிவு | 27 |
| பொருளாதாரம், உயிரியல் மற்றும் தரவு படிமுறைப் பிரிவு | 33 |
| பரவலாக்கல் மற்றும் பயிற்சிப் பிரிவு | 39 |
| ஆராய்ச்சிப் பண்ணைப் பிரிவு | 45 |
| நிர்வாகம் மற்றும் கணக்குப் பிரிவு | 47 |
| பதவியணியினரை வலுப்படுத்தல் மற்றும் செயல் நோக்குறுத்து | 50 |
| பதவியாளர்களின் பயிற்சி | 51 |
| வெளியீடுகள் மற்றும் மதிப்பீடுப் பிரிவு | 52 |
| கற்கைசார் அறிக்கைகள் | 53 |
| விருதுகள் | 53 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை - 2010 | 54 |
| கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கைகள் | 55 |
| நிதி நிலைப் பற்றிய அறிக்கை | 55 |
| நிதிசார் வினைத்திறன் கூற்று | 56 |
| காசு பாய்ச்சல் கூற்று | 57 |
| நிதி நிலைக்கான குறிப்புகள் | 58 |
| நிதி செயற்பாடுகள் சார்ந்த குறிப்புகள் | 62 |
| அட்டவணை 1 – உடைமை, இயந்திரத் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 64 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 65 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 71 |
| 2005 முதல் 2009 வரையான விசேட நிதிசார் அம்சங்கள் | 74 |

## தூரநோக்கு

இலங்கை சீனி தொழில்நுட்பத்தின் சிறப்பு நிலையமாக திகழ்தல்.

## செயற்பணி

தகுந்த கரும்பு தொழில்நுட்பம் தொடர்பாக அபிவிருத்தி மற்றும் பரவலாக்கல் மூலம் இலங்கை சீனி தொழில் துறை தொடர்பான உற்பத்தித்திறன், இலாபம் மற்றும் நிலைப்பாட்டை மேலோங்கல்.

## குறிக்கோள் மற்றும் எதிர்கால தோற்றம்

கரும்புத் தொழிலின் உற்பத்தித்திறனை உயர்த்தல், உற்பத்தி செலவீனத்தை குறைத்தல், உற்பத்தியாளர்களின் வருமானத்தை உயர்த்தல் மற்றும் சீனி தொழில்சார் இணை உற்பத்திகளின் பாவனை மேம்படுத்தல் நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் எதிர்கால தோற்றத்தில் உள்ளடங்கும்.

## ஆளுகை சபை

| | | |
|---|---|---|
| கலாநிதி. எஸ்.எஸ்.பீ.டீ. ஜயவர்தன | தலைவர்(பதில்) | முக்கியமான விஞ்ஞானிகளை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட ஆளுகை சபையின் தலைவர் (2010.01.04 முதல் 2010.05.17 வரை) |
| திரு. நிஷான் எம். முதுகிருஷ்ணா | தலைவர் | முக்கியமான விஞ்ஞானிகளை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட ஆளுகை சபையின் தலைவர் (2010.05.17 முதல் 2010.12.01 வரை) |
| திரு. எஸ்.கே. சிரில் | தலைவர் | முக்கியமான விஞ்ஞானிகளை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட ஆளுகை சபையின் தலைவர் (2010.12.01 முதல் 2010.12.31 வரை) |
| பேராசிரியர். எச்.பி.எம். குணசேன | உறுப்பினர் | முக்கியமான விஞ்ஞானிகளை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட ஆளுகை சபையின் உறுப்பினர் (2010.ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை) |
| கலாநிதி. என்.சி. குமாரசிங்க | உறுப்பினர் | பணிப்பாளர் (பதவிவழி உறுப்பினர்) |
| செல்வி. எல்.டி. சேனாநாயக்க | உறுப்பினர் | நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை) |
| திரு. டி.எஸ்.யூ. விக்கிரமராரச்சி | உறுப்பினர் | நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. ஜூலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை) |
| திரு. ஆர்.எம்.ஜி.கே.பீ. ரத்நாயக்க | உறுப்பினர் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை) |
| திரு. நிவ்டன் பீரிஸ் | உறுப்பினர் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை) |
| திரு. சம்பத் கஜதீர | உறுப்பினர் | நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை) சிறு தோட்ட பயிர்கள் அபிவிருத்தி அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. பாரத ராமநாயக்க | உறுப்பினர் | சிறு தோட்ட பயிர்கள் அபிவிருத்தி அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை) |
| செல்வி. திஸ்னா தர்மசேகர | உறுப்பினர் | சிறு தோட்ட பயிர்கள் அபிவிருத்தி அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் (2010. ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை) |

# தலைவரின் செயலாற்றுகை மீளாய்வுக் கூற்று

இலங்கையின் சீனி உற்பத்திசார் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை பெற்றுக்கொடுப்பதற்காக இலங்கை பாராளுமன்றத்தின் 78/1981 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிலையாக்கப்பட்ட கரும்பு ஆராய்வு நிலையம் 1983 ஏப்ரல் மாதம் முதல் இன்று வரை கருதக் கூடிய அளவிலான முன்னேற்றத்தை பெற்று இருப்பினும் இலங்கையினுள் சீனி உற்பத்தித் துறையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் காரணமாக அந்தந்த காலங்களின் போது எதிர்பார்க்கப்பட்ட சாதனைகளை அடைவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டின் போது சீனி இறக்குமதி செய்வதற்காக சுமார் 41 பில்லியன் ரூபாக்களை செலவிடப்பட்டுள்ளதோடு சீனி பாவனை நிலையின் தன்மைகள் மற்றும் உலகச் சந்தையின் சீனி விலை மதிப்புகளை கவனத்தில் கொண்டு பார்ப்பதின் போது 2011 ஆம் ஆண்டில் சுமார் 45 பில்லியன் ரூபாக்கள் செலவீனமாகும் என அனுமானிக்க முடியும். இந்நிலை எதிர்காலத்தின் போது மேலும் பிரதிகூலமான முறையில் மாற்றமடைய இயலுமானதால் தற்போது நிலவும் இரு சீனி உற்பத்திசாலைகளின் உச்ச உற்பத்திக் கொள்ளளவுக்கு போதுமான கரும்பு மரங்களை பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகளை ஊக்கிவைத்தல் மற்றும் அறிவூட்டல் போன்றே வர்த்தக ரீதியில் மிகவும் முக்கியமாகின்ற கரும்பு வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு சீனி உற்பத்தியை இரண்டு மடங்காய் அதிகப்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளது.

"*மஹிந்த சிந்தனை*" வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது செயற்பட்டு வருகின்ற சீனி உற்பத்திசாலைகள் உச்ச கொள்ளளவுடன் செயற்படுத்துவதோடு தப்பான முகாமைத்துவ செலவீனங்கள் காரணமாக தற்போது மூடப்பட்டிருக்கும் ஹிங்குரானை மற்றும் கந்தளை சீனி உற்பத்திசாலைகளை கூடிய விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் நாட்டின் சீனி தேவைப்பாட்டில் இருந்து சுமார் 20%ம் அளவு நாட்டினுள்ளே உற்பத்தி செய்துக்கொள்ளும் திறமையை ஈராண்டு காலத்தினுள் அடைந்திடும் சவாலை வெற்றி பெற்றிட தேவையான அலுவல்கள் 2011 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் பாரம்பரிய கரும்பு இனங்களுக்கு பதிலாக அதிக விளைச்சலை தரக்கூடிய கரும்பு இனங்களை அறிமுகப்படுத்தல், கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால் கரும்பு பயிர் முகாமைத்துவம் தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நவீன விதிமுறைகள் உபயோகிப்பதன் மூலம் இலக்குகளை அடைந்திட முடியும்.

வர்த்தக ரீதியில் இலாபகரமான பலதரப்பட்ட விவசாய போகங்களின் திசைக்கு கரும்பு விவசாயிகள் வருவதை சென்ற பல வருடங்களினுள் காண்பதற்கு கிடைத்ததோடு விவசாயிகளை நவீன முறைகள் தொடர்பாக அறிவூட்டல் மற்றும் நவீன தொழில்நுட்ப விதிமுறைகள் அறிமுகப்படுத்துதல், கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் திட்ட முறை காரணமாக கரும்பு விவசாயிகளிடம் இத்தொழில் தொடர்பான நம்பிக்கை ஏற்படுத்துவதன் மூலம் தொழில் நிலைப்பாட்டுக்காக பெருமளவிலான பங்கேற்பை கரும்பு ஆராய்வு நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இவ் ஆராய்ச்சி நிலையம் கரும்பு பயிர்கள் தொடர்பான நோய்கள், பூச்சிபீடை கட்டுப்பாடு மற்றும் இனங்காணல் நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் அண்மையில் பசறை பிரதேசத்தில் ஏற்பட்ட கம்பளி ஏபிட்டு தொல்லையினை வெற்றிகரமான முறையில்

தடுக்கப்பட்டு விவசாயிகளிடம் கரும்பு ஆராய்ச்சி நிலையம் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கரும்பு ஆராய்வு நிலைய விஞ்ஞானகூடங்கள் தொடர்பாக தேவையான விஞ்ஞான சாதனங்கள் / கருவிகள் பெற்று கொடுக்கப்பட்டிருப்பினும் கொழும்புக்கு வெளியே பின்தங்கிய ஒரு பிரதேசத்தில் சேவைபுரிவதற்காக நிபுண விஞ்ஞானிகளின் சேவையை தொடர்ந்து பெற்றுக்கொள்வதில் கடினங்கள் இருக்கின்றது. பலதரப்பட்ட கடினங்கள் மத்தியிலும் கரும்பு ஆராய்ச்சி விடயம் தொடர்பாக பெற்றுக்கொண்டுள்ள ஒரு சில விஞ்ஞானிகளை நிருத்தி வைத்துக்கொள்ள ஆளுகை சபை முயன்றுள்ளது. ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு தேவையான சேவைகள் கொழும்பில் இருந்து வழங்க வேண்டிய நிலை இன்னுமொரு தடையாகும்.

2010 இல் இலங்கையில் கரும்பு கருப்பட்டி சுமார் 850 டொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதோடு இது உள்நாட்டு தேவைக்கு போதுமானதாக அமையவில்லை. உயர் தரத்தைக்கொண்ட "*ரன் கெட்ட*" எனும் வர்த்தக பெயருடன்கூடிய கரும்பு கருப்பட்டி உற்பத்தியினை 2011 ஆம் ஆண்டு இறுதிக்கு முன் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கரும்பு கருப்பட்டி உற்பத்தி அதிக இலாபகரமானதாக இருப்பதால் சீனி உற்பத்திச்சாலைகளுக்கு கரும்பு வழங்குவதில் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத முறையில் செவனகல மற்றும் பெல்வத்தை பிரதேசங்களுக்கு வெளிப்புற பிரதேசங்களை கருப்பட்டி உற்பத்திக்கான கரும்பு பெற்றுக்கொள்வதில் ஊக்கமளித்தல் வேண்டும்.

2010 ஆம் ஆண்டினுள் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் விசேட கவனம், பல்வேறான விவசாய பிரதேசங்களுக்கு பொருத்தமாகின்ற, வளர்ச்சி மற்றும் சீனி விளைச்சல் உயர்தரமான நிலையிலுள்ள, பூச்சி மற்றும் நோய்களின் தாக்கத்தை எதிர்க்கக்கூடிய கரும்பு வர்க்கங்கள் தொடர்பாக கவனம் செலுத்தல். அதிக பயனான பயிர் முகாமைத்துவம் மற்றும் அதற்காக தேவைப்படும் உரம் பாவனையை இனங் காணுவதும், கிருமி பூச்சிகள் மற்றும் நோய்களால் ஏற்படக்கூடிய தாக்கங்களை கட்டுப்படுத்தலும் சிறு விவசாயிகளை இயந்திரமயப் படுத்துவதில் தகுந்த விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி செய்தல், சீனி தொழில்சார் துணை உற்பத்திப் பொருட்கள் மற்றும் சீனி தொழில் பிரிவுகளை பல்வகைப்படுத்துவதற்காக தேவையான தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல் எனும் காரணங்கள் தொடர்பாக தீவிர கவனத்தை செலுத்தப்படும்.

**எஸ்.கே. சிரில்**
தலைவர்
கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்.

# பணிப்பாளரின் அறிக்கை

1981 இன் 75 ஆம் இலக்க ஆணைச்சட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கரும்பு ஆராய்ச்சி நிலையம் இவ்வாண்டில் தமது 27 வது ஆண்டு நிறைவை கொண்டாடி சீனி உற்பத்தித்துறையை விருத்தி செய்வதைப் பொருட்டு அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பரவலாக்கல் அலுவல்களை மேற்கொள்ளப்படுகின்றன. கரும்பு ஆராய்வு நிலையத்தின் நிர்வாகம் மூன்று அமைச்சுகளின் கீழ் (மேலதிக விவசாய போகங்கள் அபிவிருத்தி அமைச்சில் இருந்து கமற்றொழில் அமைச்சுக்கும், கமற்றொழில் அமைச்சிடமிருந்து சிறு ஏற்றுமதி பயிர்கள் மேம்பாட்டு அமைச்சுக்கும்) இயங்கப்பட்டமை 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிக முக்கிய நிர்வாக ரீதியான விடயமாகும்.

2010 ஆம் ஆண்டின் ஆராய்ச்சிகள் சம்பந்தமான நிகழ்ச்சி, கரும்பு ஆராய்ச்சி நிலைய உற்பத்தித்திறனை உயர்த்தல் மற்றும் உற்பத்திச் செலவை குறைத்தல் மற்றும் விவசாயிகளின் ஏனைய வருமான வழிகளுக்கு வசதியளித்தல் என்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது.

உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சியின் கீழ் அதி உயர் தரத்தின் கரும்பு வகைகளான SL 95-4443, SL 96 061 மற்றும் SL 96 128 எனும் இனங்களை பெல்வத்தை பிரதேசத்தில் பெரும் தோட்ட விவசாயத்தின் கீழ் விவசாயம் செய்வதற்காக மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மூன்று வகைகளும் 2011 ஆம் ஆண்டில் இருந்து வர்த்தக விவசாயத்திற்காக பெற்றுக்கொள்ள முடியுமானதாக இருக்கும்.

இதற்கு மேலதிகமாக அதி உயர் தரத்திலான இன்னும் மூன்று கரும்பு வகைகளான SL 95-4432, SL 95-4443 மற்றும் SL 96 328 பெருந் தோட்ட விவசாயத்திற்கு விடுவிப்பதற்கு முன்னர் பாரிய அளவிலான மதிப்பீட்டுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளது. கரும்பு கன்று விவசாயத்தின் போது இலை சருகுகளால் ஆவரணிப்பதால் விளைச்சலை அதிகப்படுத்திக்கொள்ள முடியும் என்பது விவசாய முகாமைத்துவம் பற்றிய ஆராய்வுகளால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே அரிதாள் கட்டைகளை வெட்டுதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்பல் எனும் செயற்பாடுகளால் கரும்புப் பயிர் அரிதாள் முளையின் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு காரணமாகுவதாக ஆராய்வு ரீதியில் உறுதிபடுத்தப்பட்டுள்ளதோடு பின் சந்தர்ப்பத்தில் அரிதாள் வெட்டுவதை கரும்பு தண்டுகளுக்கு பாதிப்பேற்படுத்துவதை தடுக்கும் காரணமாக இனங்காணப்பட்டுள்ளது.

முப்பிணை சுபர் பொஸ்பேட் (TSP) க்கு பதிலாக மேற்படி தரத்திலான எப்பாவல றொக் பெஸ்பேட்டு (HERP) இட்டு செலவீனத்தை குறைத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்வின் போது அவ் இரு வகை உரங்களை வெவ்வேறாக இடுவதால் கரும்பு விளைச்சலில் அல்லது சீனி சதவீதத்தில் கருதக்கூடியளவு வித்தியாசங்கள் காண்பதற்கில்லை என ஆராய்வுகள் மூலம் காணப்பட்டுள்ளது. கம்பளி (வூலி) ஏபிட்டு எனும் பூச்சி பீடையை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வாதி டைபா அஷிடோவோரா எனும் பூச்சை ஆய்வுக்கூடத்தினுள் வளர்த்து பயிர் மீது விடுவிக்கும் செயற்பாட்டினை மிகவும் வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் மூலம் கம்பளி (வூலி) ஏபிட்டு தாக்கத்தை குறைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

சீனி தொழில்சார் உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதற்காக கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப மாற்றுத் திட்டங்கள் ஊடாக துணையளிப்பதில் நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன் பிரகாரம் பெல்வத்த, ஹிங்குரானை, சியம்பலாண்டுவ மற்றும் பசறை பிரதேசங்களில் விதை கரும்பு உற்பத்தி செய்யும் விவசாய நிலங்களை ஏற்பாடு செய்து இனங்களை பிரசுரப்படுத்துவதற்கும் காட்சித்தல் மற்றும் செய்முறையாக உதாகரணப்படுத்துவதன் மூலம் முள் கலப்பை மற்றும் தட்டு கலப்பை அறிமுகப்படுத்துவதற்கும் இயலுமாகியதோடு புல் மற்றும் பசளை முகாமைத்துவம் பற்றிய பயிற்சிகள் மற்றும் புதிய விவசாயிகளுக்கு கரும்பு விவசாயம் தொடர்பான பயிற்சி என்பன வழங்கப்பட்டன.

கரும்பு ஆராய்வு நிலையத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளாக கருப்பட்டி மற்றும் சாறு தொழிலுக்காக புதிய விவசாய நிலங்களை மேல் முன்னேற்றுவதற்கும் பசறை பிரதேசத்தில் பிரதான கரும்புப் பயிர்களின் நோய்ப் பூச்சான வூல் தாவரப் பேன்களை கட்டுபடுத்துவதும் முக்கியமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் மகாயாய தோட்டத்திலும் பிங்கிரியாவிலும் தெங்கு

விவசாயத்தில் அடித்தள நிலத்தில் கரும்பு விவசாயத்தை ஏற்படுத்துவதற்கும் அப்புதிய விவசாயிகளுக்கு கரும்பு விதைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அபிவிருத்தி முயற்சிகளாகும்.

அதற்கு மேலதிகமாக புத்தலை, படல்கும்புர மற்றும் சியபலாண்டு விவசாயிகளுக்கு மேலதிக வருமானங்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுக்காக துணையளிப்பதும், அதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் மற்றும் சர்வதேச விவசாய நிதியத்தில் (IFAD) நிதிசார் உதவிகள் ஊடாக இடை பயிருக்காக விதைகள் மற்றும் இயந்திர உபகரணங்களும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கல்ஓயா கருத்திட்டப் பிரதேசத்தில் உயர்தர விளைச்சல் தரக்கூடிய கரும்பு இனங்களுடைய செய்கைகள் ஆரம்பித்தல் தொடர்பான விசேட நிகழ்ச்சிகளின் ஆரம்ப கட்டத்தை, பதுளை, படல்கும்புரை, சியபலாண்டு மற்றும் வெல்லவாய பிரதேசங்களின் விவசாயிகளுக்காக நடாத்தப்பட்டது.

ஆஸ்திரேலியா, கியுபா மற்றும் தாய்லாந்து போன்ற வெளிநாடுகளில் சீனி உற்பத்தியுடன் தொடர்புப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அதன் ஊடாக இலங்கையின் கரும்பு விவசாய துறைக்கு தேவையான அறிவுரைகள் மற்றும் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு இயலுமாகியது. இதன் பிரகாரம் தாய்லாந்தில் தாய் சீனி உற்பத்தியாளர்களின் சங்கத்தின் பல உறுப்பினர்கள் எதிர்கால பரிமாற்று நிகழ்ச்சியின் கீழ் இலங்கைக்கு வந்து கலந்துரையாடப்பட்டது. பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 59 கரும்பு இனங்கள் கரும்பு ஆராய்வு நிலையத்தில் மரபணு பிளாஸ்மா மேல் முன்னேற்றிக் கொள்வதற்கு சேர்த்துக்கொள்ளலும் இவ்வாண்டில் தனியாக காட்சித்தது.

2010 இல் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் சேவையாளர் எண்ணிக்கை மற்றும் ஆட் சேர்த்தல் தொடர்பாக தேசிய சம்பள மற்றும் புள்ளிவிபர ஆணைக்குழுவின் விதப்புரைகளின் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிறுவனத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கிடைத்திருப்பதால் இது வரை இயக்கமற்ற நிலையில் இருந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. பயணிகள் பஸ் வண்டியொன்று மற்றும் கெப் வண்டியொன்று நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்காக இரு இல்லரங்களும் இவ் ஆண்டினுள் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் உள்கட்ட வசதிகளுடன் சேர்ந்தன.

**கலாநிதி. என்.சீ.கே. குமாரசிங்க**
பணிப்பாளர்/தலைமை நிறைவேற்றதிகாரி

# பிரிவுகள் சார்ந்த அறிக்கைகள்

# பயிர் இனவிருத்தி பிரிவு



**பயிர் இனவிருத்தி பிரிவு**

**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. ஏ. விஜேசூரிய B.Sc (Agric), MPhil | தலைமை ஆராய்வு உத்தியோகத்தர், பிரிவு தலைவர் |
| செல்வி. ஏ.எம்.எம்.எஸ். பெரெரா BSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திருமதி. டி. மானெல் BSc, MSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திரு. ஆர்.டபிள்யூ.எம்.எஸ். ராஜபக்ஷ | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. ஏ.எல்.சி. குமாரி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டீ. வீரசிங்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. எல்.டி.டி.பி. குணரத்ன | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டபிள்யூ.ஜி.எம்.ஜே. பெரேரா | ஆய்வுக்கூட / கள பணியாளர் |
| திருமதி. எஸ்.எச். கருணாரத்ன | ஆய்வுக்கூட / கள பணியாளர் |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- வர்த்தக வெளியீடாக 1995 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளின் தரங்களிலிருந்து முன்னேற்றப்பட்ட கரும்பு வகைகளை இனங்காணப்பட்டிருப்பமை.
- 1997 இன பெருக்கல் இனத்திற்குரிய மூன்று அதி சிறந்த கரும்பு இனங்களை மேலதிக விவசாயத்திற்காக இனங்காணப்பட்டிருப்பமை.
- 1998 ஆம் தரத்திலிருந்து பெருக்குவதற்காக ஏழு உயர்தர விளைச்சலைத் தரக்கூடிய இனங்களை இனங்காணப்பட்டிருப்பமை.
- 2002 தரத்தில் இருந்து எதிர்பார்ப்புகள் வைக்கக்கூடிய 38 இனங்களை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- கரும்பு மரபியல் காரணி அமைப்பின் புதியதோர் நேர் பகர்ப்பை தெனியாய, எனசால்வத்த கரும்பு இனப்பெருக்கல் நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.
- 1512 கரும்புச் சேர்க்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கரும்பு மரபியல் காரணி பிலாஸ்மா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இனங்களை ஒன்று சேர்ப்பதால் முன்னேற்றப்பட்டுள்ளது.
- கரும்பு மரபியல் காரணி பிலாஸ்மா பாதுகாத்திடவும் பயன்படுத்திடவும் பட்டது.
- கரும்பு மரபியல் காரணி பிலாஸ்மாவில் காணப்படும் மாதிரிகள் சார்ந்த வகைகளை நிர்ணயிக்கப்பட்டது.

**சாதனைகள் சுருக்கமாக**

**வர்த்தக வெளியீடுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்கள்**

1995 மற்றும் 1996 இனப்பெருக்கல் பரம்பரைகளை சார்ந்த மேல் முன்னேற்றம் செய்யப்பட்ட 6 கரும்பு வகைகளான SL 95 4430, SL 95 4433, SL 96 061, SL 96 128 எனும் இனங்களை 2011 ஆம் ஆண்டில் உத்தியோகப்பூர்வமாக வர்த்தக விவசாய ரீதியில் வெளியிடுவதைப் பொருட்டு இனங்கள் வெளியிடும் குழுவிடம் பிரேரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் கரும்பு வகைகளாக இனங்காணப்பட்டது.

**1997 இனப்பெருக்கல் பரம்பரைக்கு சொந்தமான உயர்தர கரும்பு வகைகளை தேர்ந்தெடுத்தல்.**

SL 97 1118, SL 97 1239 மற்றும் SL 97 1442 எனும் மூன்று கரும்பு வகைகள் பிரதி செய்யப்பட்ட விளைச்சல் பரிசோதனையால் (RYT) ஆரம்ப தளிர் மற்றும் கன்று பயிரை சார்ந்த தரவுகளை பகுப்பாய்வு செய்து வேட்பு வகைகளாக இனங்காணப்பட்டுள்ளது. இக் கரும்பு வகைகள் வர்த்தக நிலைகளின் கீழ் மதிப்பிடுவதற்காக தேவையான விதை கரும்பு தொகைகளை பெற்றுக்கொள்வதற்காக பெருக்கம் செய்யப்பட்டது. இவ் வகைகளின் முற்றும் முறையை பரிசோதிப்பதற்காக சுழற்சி பயிர் விஞ்ஞானப் பிரிவுக்கு விதை கரும்பு பெற்று கொடுக்கப்பட்டது.

**1998 இனப்பெருக்கல் பரம்பரைக்கு சொந்தமான உயர்தர கரும்பு வகைகளை தேர்ந்தெடுத்தல்.**

உடவளவை மற்றும் பெல்வத்த பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ரேர் பதர்ப்பு விளைச்சல் பரிசோதனையின் போது கன்று செய்கைக்கு மற்றும் முதலாவது தளிர் செய்கைக்குரிய தரவுகள் பகுப்பாய்வு செய்வதனால் ஏற்கப்பட்டுள்ள 7 கரும்பு இனங்களான SL 98 2087, SL 98 2118, SL 98 2524, SL 98 2535, SL 98 2549, SLT 4920 மற்றும் SLT 4921 எனும் கரும்பு இனங்களை வர்த்தக ரீதியில் வெளியிடுவதற்கு முன்னர் பின்தொடரும் ஆராய்ச்சிகளுக்கு தேவையான விதைகளை பெருக்கப்பட்டுள்ளது.

**2002 பரம்பரைக்குரிய நம்பகமான இனங்களின் தேர்வு**

2002 பரம்பரைக்குரிய 167 கரும்பு வகைகள் மற்றும் திசு அமைக்கப்பட்ட 20 உப கிளோன்களை உபயோகித்து மழைப்பொழிவு நிலையின் கீழ் பெல்வத்தையில் மற்றும் மழைப்பொழிவு நிலையின் கீழ் உடவளவையில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விளைச்சல் பரிசோதனைகளால் 33 உயர்தர இனங்களை தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ் வகைகள் நோ பதர்ப்பு விளைச்சல் பரிசோதனைக்காக தேவையான விதை கரும்பு பெற்றுக்கொள்வதற்காக பெருக்கப்பட்டது.

**என்சால்வத்தையில் அமைந்துள்ள கரும்பு மரபியல் காரணியில் புதிய விதை மேடைகள் ஏற்படுத்தல்**

தெனியாய என்சால்வத்தையில் அமைந்துள்ள கரும்புப் பெருக்கல் நிலையத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் சேகரிக்கப்பட்ட கரும்பு மற்றும் கரும்பு மரத்திற்குரிய மரபியல் தொடர்பான தொடர்புகளுடனான 1208 மர மாதிரிகள் உட்படும் புதிய மேடைகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

**பெருக்கல்**

2010 சேர்க்கை காலப் பகுதியினுள் என்சால்வத்தையில் அமைந்துள்ள உப நிலையத்தில் கள அரிகன்லாம்புகள் மற்றும் பாதுகாப்பு திரவிய மூலங்கள் எனும் முறைகளை கையாளப்பட்டு கரும்பு சேர்க்கை செயற்பாட்டினை வெற்றிகரமான முறையில் செய்யப்பட்டது. 1512 அனைத்து சேர்க்கைகள் செய்யப்பட்டதோடு அவற்றில் இருந்து 659 சேர்க்கைகளை கள அரிகள் லாம்புகளை உபயோகித்து செய்யப்பட்டுள்ள துவி பெற்றோர் சேர்க்கையாக அமைந்தது. மேலும், பாதுகாக்கப்பட்ட திரவிய மூல முறையை உபயோகித்து 773 துவி பெற்றோர் சேர்க்கைகள் மற்றும் 80 பன்மை சேர்க்கைகள் நடாத்தப்பட்டது.

**மரபியல் காரணி பிலாஸ்மா அமைப்பினை உயர்த்தல்**

தைப்பொங்கல் பண்டிகை காலத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்து கொழும்புக்கு வியாபாரத்திற்காக கொண்டுவரப்பட்ட ஒன்றுடன் ஒன்று வித்தியாசமான 29 கரும்பு வகைகளை கொழும்பு நடைபாதையில் அமைந்துள்ள கடைகளால் சேகரித்துக்கொள்ளப்பட்டது. இதனை, SLC 10 01 முதல் SLC 10 29 வரை பெயரிடப்பட்டதோடு அதனை என்சால்வத்தை கரும்பு உப பெருக்கல் நிலையத்தில் நடுவப்பட்டது.

இலங்கை - பாகிஸ்தான் இணை ஆராய்வு கருத்திட்டம் சார்ந்த மரபியல் காரணி பிலாஸ்மா பரிமாற்று திட்டத்தின் கீழ் வர்த்தக மற்றும் வர்த்தக நிலைக்கு அண்மித்த 59 கரும்பு இனங்களை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. மேற்படி ஆராய்வு கருத்திட்டத்தின் மூலம் முன்னாள் இறக்குமதி செய்யப்பட்ட வர்த்தக கரும்பு வகைகளிடமிருந்து 32 வகைகள் வளராமற் போனதோடு இவ் அனைத்து வகைகளும் ஹந்தானை தாவர நோய்தடுப்பு காப்பு நிறுவனத்தில் நோய்தடுப்பு சக்தி ஏற்படுத்தி வருகின்றது.

**முனை ஆக்குத்திசு உழுது பண்படுத்தப்பட்ட கன்றுகளை உற்பத்திச் செய்தல்.**
வர்த்தக மற்றும் வர்த்தக விவசாயத்திற்கு வெளியிட அண்மித்த கரும்பு இனங்களின் இழைய வளர்ப்பினால் உருவாக்கப்பட்டு செவனகல சீனி உற்பத்திசாலைக்கு (4511 கன்றுகள்) மற்றும் கல்ஓயா சீனி உற்பத்திசாலைக்கு (3093 கன்றுகள்) ஆரம்ப விதை மேடைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பெற்றுகொடுக்கப்பட்டது. முனை ஆக்குத்திசு நுண்ம வளர்ச்சி விதிமுறையின் போது குறைவான பெருக்கல் வேகத்தை தோற்றிய கரும்பு இனங்களை தேர்ந்து பொலித்தீன் மறைப்பினுள் பக்கசார்ப்புடனான முளை பெறுக்களுக்கு (LSM) பாத்திரப்படுத்தி 2450 கன்றுகளை உற்பத்தி செய்யப்பட்டது.

**முனை ஆக்குத்திசு நுண்ம வளர்ச்சியின் மூலம் வைரஸ் அமைப்பினை முழுமையாகவே அகற்றல்**

கரும்பு மரத்தில் பஸிலிபோம் வைரஸ் (SCBV) இல்லையென்பதை கண்டறியப்பட்டதோடு கரும்பு மரத்தில் முனை ஆக்குத்திசு நுண்ம வளர்ச்சியின் மூலம் இவ்வைரஸ் முழுமையாகவே அகற்றப்படும் என உறுதியாகியுள்ளது. மேலும், இவ்வைரஸை முழுமையாகவே அகற்றுவதற்கு முனை முளையின் அளவு 1.5mm க்கு விட குறைய வேண்டும் எனவும் 1 – 1.5 mm க்கு இடைப்பட்ட அளவில் முளைகள் வளருதல் மற்றும் பெருக்குவதற்கு தகுந்த அளவு எனவும் இனங்காணப்பட்டுள்ளது.

# பயிரியல் பிரிவு



**பதவியணி**

| | |
|---|---|
| கலாநிதி டபிள்யூ.ஆர்.ஜி.விதாரம BSc, MPhil, PhD | தலைமை ஆராய்வு அதிகாரி மற்றும் துறை தலைவர். |
| திரு. ஏ.எல்.சீ.டி.சில்வா BSc, MPhil | சிரேஷ்ட ஆராய்வு அதிகாரி |
| திரு. டபிள்யூ.ஜீ.நிமல் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டீ.ஜி.ஜி.எஸ்.சந்தநாயக்க (என்.றி.ரி.) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |

ஆராய்வு சுருக்கம்

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- மேல் முன்னேற்றப்பட்ட 1990, 1992 மற்றும் 1993 எனும் தொகுதிகளின் சிறந்த தளிர் விளைச்சல் இனங்களை இனங்காணப்பட்டது.
- வர்த்தக விவசாயம் தொடர்பாக விதந்துரைப்பதற்கு அண்மித்த நிலையிலான 1995 மற்றும் 1996 காண்டங்களை சார்ந்த புதிய கரும்பு வகைகளின் கரும்பு முற்றும் விதத்தை இனங்காணப்பட்டது.
- உழுவும் ஆழம் கரும்பு பயிரின் வினைத்திறன் தொடர்பாக ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை உறுதிபடுத்தப்பட்டது.
- தளிர் விளைச்சலின் போது அடிக்கட்டை சீவல், உரமிடல் மற்றும் இடைவெளி நிரப்பல் மூலம் ஏற்படக்கூடிய வினைத்திறனை இனங்காணப்பட்டுள்ளது.
- உற்பத்திக் குறைவான கரும்பு நிலங்களை குப்பைகளுடன் கிலிரிசீடியா (Gliricidia) இடுவதால் முன்னேற்றிட முடியும் என உறுதிபடுத்தப்பட்டுள்ளது.
- மழைப் பொழிவின் கீழ் இடைவெளிகளில் மாற்று விவசாயங்கள் (STP) செய்வதிலான சாத்தியங்கள் மற்றும் இடைவெளி மாற்று விவசாயத்திற்காக ஒற்றை தளிர்களுடன்கூடிய விதை கரும்பு பெற்றுக்கொள்வதிலான சாத்தியங்களை உறுதிபடுத்தப்பட்டது.
- கிளிநொச்சியில் விதை கரும்பு படுக்கைகளை நிலைநாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டது.

**சாதனைகள் சுருக்கமாக**

**வர்த்தக/வர்த்தக நிலைக்கு அண்மித்து இருக்கும் கரும்பு வகைகளின் தளிர் விவசாய சக்தியை பரிசோதித்தல்.**

எஸ்எல் 92 4918 மற்றும் எஸ்எல் 93 945 எனும் வகைகள் நீர்ப் பாசானத்தின் கீழ் சிறந்த தளிர் செய்கை இனங்களாக இருப்பதோடு எஸ்எல் 90 6237 வகை நீர்ப்பாசான மற்றும் மழைப் பொழிவுடனான எனும் இரு விவசாய முறைகளின் கீழும் Co775 இனத்திற்கு விட அதிகமான சாத்தியத்தை தோற்றியது.

**வர்த்தக நிலைக்கு அண்மித்த 1995, 1996 காண்டங்களின் முற்றும் விதம்**

வர்த்தக விவசாயத்திற்கு வெளியிட அண்மித்த இனங்களின் முற்றல் வீதம் (எஸ்எல் 95 4430, எஸ்எல் 95 4120, எஸ்எல் 95 4226, எஸ்எல் 95 4421, எஸ்எல் 95 4425,

எஸ்எல் 95 4430, எஸ்எல் 95 4432, எஸ்எல் 95 4443, எஸ்எல் 96 061, எஸ்எல் 96 128, எஸ்எல் 96 175, எஸ்எல் 96 234, எஸ்எல் 96 278, எஸ்எல் 96 328, எஸ்எல் 96 328, எஸ்எல் 96 347, எஸ்எல் 96 771) சீ ஓ 775 க்கு சமமாகும். அனைத்து வகைகளும் நடுவப்பட்டு சுமார் 11 – 12 மாத காலத்தில் உச்சமாக முற்றுவதோடு இதனை நடுவப்பட்டு 16 – 17 மாத காலம் வரை இன் நிலையில் வைத்துக்கொள்ள முடியும்.

**நில அமைப்பின் ஆழம் கரும்புப் பயிரின் வளர்ச்சிக்கும் விளைச்சலுக்கும் ஏற்படுத்தும் பாதிப்பு**

ஆகக் குறைந்த நில ஏற்பாடோ அல்லது நிலத்தை ஏற்பாடு செய்யாமல் விதை நாட்டுவதற்கு ஒப்பாக பார்க்கின்ற போது காணியொன்று மத்திய அளவுக்கோ ஆளமாக உழவிடப்பட்டு விதைகள் நடுவப்படுவதால் விதை முளைவிடுதல், கள பயன்பாடு மற்றும் ஆரம்ப பயிர் வளர்ச்சி தொடர்பாக வறட்சியினால் ஏற்படக்கூடிய அனர்த்தமான தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு இயலுமானதாக இருக்கும். ஆயினும் அறுவடை செய்யும் சந்தர்ப்பத்தின் போது ஒரு அலகு நிலப் பரப்பில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கரும்பு மரங்களின் எண்ணிக்கை மற்றும் கரும்பு மரங்களின் எடை தொடர்பாக இவ் வித்தியாசமான நில அமைப்பு விதிமுறைகளால் ஏற்படக்கூடிய தாக்கத்தில் கருதத்தக்க மாற்றங்களை தோற்றப்படவில்லை.

**கரும்பு விளைச்சல் மீதான தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப தளிர் முகாமைத்துவ முயற்சிகள் தொடர்பான பாதிப்பு**

கரும்பு பயிரின் ஆரம்ப தளிர் செய்கை முகாமைத்துவ முயற்சிகளால் கரும்பு அடிக்கட்டைகளை வெட்டுதல், உரம் இடுதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்பல் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாக கற்கப்பட்டது. தளிர் செய்கையின் வளர்ச்சி, வினைத்திறன் மூலம் இவ் அனைத்து முகாமைத்துவ முயற்சிகள் தளிர் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு அவசியமானதென வெளிப்படுத்தியது. அவ்வாறே முதலாவது தளிர் வளர்ச்சியில் இருந்தே விளைச்சல் அதிகப்படுவதற்கு உரமிடுவதும் மிக முக்கியமானதாகும். வெற்றிடங்களை நிரப்பல் இரண்டாவது தளிர் வளர்ச்சியில் மற்றும் பிற்காலத்து தளிர் செய்கைகளில் அறுவடையை கருதக்கூடிய அளவில் உயர்த்துவதற்கு உதவியது. கரும்பு அடிக்கட்டைகள் வெட்டப்படுவதால் பிற்காலத்து தளிர் செய்கைகளில் வளர்ந்த கரும்பு மரங்கள் சாவடைவது குறைவடைவதாகவும் அதன் மூலம் தளிர் செய்கை விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு காரணமாகுமெனவும் காணக்கிடைத்தது.

2010 ஆக்தோபர் மாதத்தின் போது III வது தளிர் விளைச்சலை அறுவடை செய்ததோடு IV வது தளிர் பயிரை மேலெடுக்கப்பட்டுள்ளது.

**மண் அரிப்புக்கு உட்பட்ட காணிகளின் உற்பத்தி கொள்ளளவை அதிகப்படுத்துவதற்காக கிலிரிசிடியா இலை ஆவரணமாக இடுவதால் ஏற்படும் பாதிப்புகள்.**

கரும்புப் பயிரின் கன்று செய்கைக்கு கிலிரிசிடியா இலைகளை ஆவரணமாக இடுவதாலும் உரமிடுவதாலும் மேற்கூறிய இலை ஆவரணம் மற்றும் உரமிடாத பயிர்களைவிட கருதக்கூடிய அளவில் அதிகமான விளைச்சலை பெற்றுக்கொள்ள கூடியதாக காணக்கிடைத்தது. அவ்வாறே கன்று செய்கையில் உரம் செலுத்துவதால் மிக அதிகமான விளைச்சலை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மழை பொழிப்புடனான

நிலையின் கீழ் கன்று செய்கைகளில் தளம் போடப்படுவதன் மூலம் கருதத்தக்க விளைச்சல் அதிகரிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

**இடைவெளியுடனான மாற்றுப்பயிர் முறை.**

கரும்பு விவசாயத்தின் விளைச்சலை அறவிடல் செய்ததன் பின்னர் மீதமாகின்ற தண்டுகளால் வெட்டியெடுக்கப்படுகின்ற ஒற்றைக் கணுகளை குறிப்பிட்ட இடைவெளியுடன் கன்றுகள் நடுவப்படும் பெருக்கல் தொழில்நுட்பத்திற்காக கன்றுகளை பெற்றுக்கொள்வதற்காக விதைப் படுக்கைகளில் நடுவப்படுதல் மிகவும் பொருத்தமானதென அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளால் தெளிவாகியது. முற்றிய கரும்பு தண்டுகளால் பெற்றுக்கொள்ளும் தனி கணுத் துண்டுக்கள் நடுவப்படுவதால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கன்றுகளின் தொகையைவிட கருதத்தக்க அளவில் அதிகமான கன்றுகளின் எண்ணிக்கையை கரும்பு தண்டுகளால் வெட்டியெடுக்கப்படுகின்ற துண்டுகளை நடுவப்படுவதால் பெற்றுக்கொள்ள முடியும் என காணக்கிடைத்தது. எவ்வாறாயினும் கரும்புத் தண்டின் முனையுடன் சேர்ந்த முற்றாத பகுதியால் வெட்டி எடுக்கப்படுகின்ற தனி கணு பாகங்களை நடுவப்படுவதால் ஏற்படும் கன்றுகள் பலயீனமானது போன்றே களத்தில் நடுவதற்கு அவ்வளவு உகந்ததாக இருக்கவில்லை. விதைப்படுக்கையில் நடுவப்பட்டு 4 வாரங்களுக்கு பின்னர் கன்றுகளை வயலில் நடுதல் மிகப் பொருத்தமானதென இதன் போது மேலும் வெளிவந்தது.

**கிளிநொச்சியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விதை கரும்பு படுக்கை**

கிளிநொச்சி பிரதேச கமற்றொழில் ஆராய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தை சார்ந்த சுமார் 0.4 ஹெக்டேயார் பரப்புடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எஸ் எல் 8306 இனத்தின் விதை கரும்பு படுக்கையின் பராமரிப்பு அலுவல்களை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக தற்போது வர்த்தக ரீதியில் விவசாயம் செய்யப்படுகின்ற ஏனைய கரும்பு இனங்களான எஸ்.எல் 7130, எஸ்.எல் 88 116 மற்றும் எம் 438/59 எனும் வகைகள் பெருக்கல் தொடர்பாக சுமார் 0.1 ஹெக்டேயார் பரப்பளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விதை கரும்பு படுக்கையை பராமரித்து வரப்பட்டுள்ளது.

# இரசாயனயியல் பிரிவு



**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. எச்.ஏ.எஸ். வீரசிங்க BSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திருமதி. டீ.பி. லியனகே BSc | பொறுப்பு ஆராய்வு அதிகாரி |
| திருமதி. ஏ.பி.ஜி.சி.ஜே.டி சில்வா BSc(Eng.) | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திரு. ஏ.பீ.ஜே. மொஹொட்டி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. ஜி.எஸ். உடவத்த | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. ஜே. குணசிரி | ஆய்வுக்கூட உதவியாளர் |
| திரு. பீ.டபிள்யூ.டி. குலதுங்க | ஆய்வுக்கூட உதவியாளர் |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- உயர்தர எப்பாவலை பாறை பொஸ்பரசு உரம் இடுவதால் கரும்பு விளைச்சல் தொடர்பாக குறிப்பிடத்தக்க எவ்வித பாதிப்புகளும் இல்லை என்பதை உறுதிபடுத்தப்பட்டது.
- ஹிங்குரானை மண்ணில் கரும்பு விவசாயத்திற்கு தேவையான உர மாதிரிகளை திருத்தியமைக்கப்பட்டது.

**பகுப்பாய்வு சேவைகள்**

கரும்பு ஆராய்வு நிலையத்தில் இனப்பெருக்கல் மற்றும் பயிரியல் பிரிவுகளால் கிடைத்த 2500 கரும்பு மாதிரிகள் தொடர்பாக தேவையான இரசாயன பகுப்பாய்வு சேவைகள் (Brix, Pol and Fibre) நடாத்தப்பட்டது.

**சாதனைகள் சுருக்கமாக**

**கரும்பு பயிருக்கு பொஸ்பரசு வளமாக எப்பாவலை உயர் தரத்தின் றொக் பொஸ்பேடு (HERP) பயன்படுத்திக்கொள்ளல்.**

இவ் ஆராய்வின் போது இரண்டாவது தளிர் செய்கை வரை எப்பாவலை உயர் தரத்தின் றொக் பொஸ்பேடு (HERP) உபயோகித்துக்கொள்வதால் கரும்பு விளைச்சலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதேனும் ஏற்படவில்லை.

**ஹிங்குரானைக்காக புதிய உர மாதிரி**

ஹிங்குரானையில் கரும்பு விவசாயம் செய்கின்ற மண் (அலுவியல், நன் கல்சிக் பிரவுன் மற்றும் செம்மண் நிற மண்) தொடர்பாக உரம் மாதிரி படுத்துவதற்கு போசனை அகற்றல் மற்றும் விளைச்சலின் இலக்குகள் எனும் விதிமுறைகள் இரண்டை அடிப்படையாகக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டது.

**பகுப்பாய்வு சேவைகள்**

கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் ஏனைய பிரிவுகளால் கிடைத்த 2500 கரும்பு மாதிரிகளுக்குத் தேவையான இரசாயன பகுப்பாய்வு சேவைகள் (Brix, Pol and Fibre) மேற்கொள்ளப்பட்டது.

# பூச்சி பீடை கட்டுப்பாட்டுப் பிரிவு



**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திருமதி. வி.கே.ஏ.எஸ்.எம். வனசிங்க BSc | பொறுப்பு ஆராய்வு அதிகாரி |
| திரு. எம்.கே.டீ. உபேசேன | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |

**ஆராய்வுகளின் முக்கிய சந்தர்ப்பங்கள்**

- கரும்பு கம்பளி ஏபிட்டு (SWA) மற்றும் அதன் இயற்கை எதிர் பூச்சிகள் தொடர்பான உயிரியல் மற்றும் சுற்றாடவியலால் கீழே வருவனவற்றை கண்டெடுக்கப்பட்டுள்ளன.
    - i. கரும்பு கம்பளி ஏபிட்டு (SWA) கரும்பு கன்றுகளுடன் சமதளமில்லாத விநியோகம்.
    - ii. மேல் கீழ் இலைகளை விட அதிகமாக நடுப்பகுதி இலைகளுக்கேற்படும் பாரிய சேதம்.
    - iii. கரும்பு மரத்தில் காணப்படும் சாம்பல் நிறத்துடனான பச்சைநிற இலைகளிடையில் அதிகமாகக் காணப்படும்.
    - iv. டய்பா அபிடிவோராவின் புழுவான பருவத்திற்கு பிற்பாடாக தினத்தில் மாலை காலத்தின் போது அதிகமாக சுறுசுறுப்படையும்.
    - v. களத்திற்கு விடுவிப்பதற்காக 3 மணித்தியாலங்கள் பட்டணியில் வைக்கப்பட்ட புழுக்கள் மிகவும் பொருந்தும்.
    - vi. டய்பா அபிடிவோராவின் புழுப் பருவத்தில் கூடுகளை செய்துக்கொள்வது கரும்பு இலைகளினுள் செய்துக்கொள்ளும்.
- கஹுடருப்ப பிரதேசத்தில் கம்பளி ஏபிட்டுகளின் வளர்ச்சிக்காக பங்களிக்கும் சிப்பிட் கொசு வகையொன்றின் புழுப்பருவத்தை இனங்காணப்பட்டது.
- கரும்பு விவசாயத்தின் கரையான்களை கட்டுப்படுத்துவதற்கு பங்களிக்கும் குரூசர் டபிள்யூ.எஸ். (தயோமெதொக்சாம் 70%) விதந்துரைக்கப்படும்.
- இறக்குமதிச் செய்யப்பட்ட கரும்பு இனங்கள் தொடர்பான நோய்தடுப்பு.

**சேவைகள்**

கரும்பு விவசாயங்கள் தொடர்பாக பூச்சி பீடை கட்டுபாட்டுக்காக தேவையான சேவைகள் வழங்கப்பட்டது.

**சாதனைகள் சுருக்கமாக**

**கரும்பு கம்பளிப் ஏபிட்டு (SWA) உயிர் வாழ்வுசார் மற்றும் சுற்றாடல் விஞ்ஞான விபரங்களும் அதன் இயற்கையான விரோதியும்**

கரும்பு விவசாயத்தில் ஆபத்தான பீடையாக கருதப்படும் கரும்பு கம்பளி ஏபிட்டு (*Ceratovacuna lanigera* Zehntner – Hemiptera : Aphididae) கரும்பு கன்றுகளுடன் சமதளமில்லாததாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது கரும்பு மரத்தில் மேல் மற்றும் கீழ் பகுதியின் இலைகளை விட மரத்தின் நடுப் பகுதியிலான இலைகளில் அதிகமாக வாசஸ்தலங்களை உருவாக்கிக்கொண்டுள்ளது.

மேலும், கரும்பு கம்பளி ஏபிட்டு இருப்பிடங்களாக சாம்பல் நிறத்தை சார்ந்த பச்சை நிறமுடனான இலைகளிலிருந்து மஞ்சல் பச்சை நிறத்தைக் கொண்ட இலைகளை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும் கரும்பு மரத்தின் மேற் கீழ் பாகங்களைவிட நடுப் பாகத்திலான சாம்பல் பச்சை நிறத்தைக் கொண்டப் பகுதியில் அதிகமாக வளர்ந்திருப்பதை காணலாம்.

வூல் பூச்சை உயிரியல் ரீதியில் கட்டுபடுத்துவதற்காக பெருமளவில் துணையளிக்கும் இயற்கை எதிர்வாதியான டய்பா அபிடிவோராவின் உயிரியல் மற்றும் சுற்றுப்புரயியல் கற்கைகளின் போது பெறுபேறுகளின் படி இவ் எதிர்வாதி புழுப்பருவங்கள் இயற்கையான சுற்றாடல் நிலைகளில் மாலை நேரத்தின் போது அதிகமாக சுறுசுறுப்படைகின்றது. மேலும், மூன்று மணித்தியாலங்கள் பட்டினியில் போடப்பட்ட புழுப் பருவங்களை வயலினுள் விடுவிக்க மிகவும் பொருத்தமாகின்றதாக உறுதியாகியுள்ளது.

இவ் எதிர்வாதியின் புழுப் பருவத்திற்கு பிற் பருவங்கள் கரும்பு இலையின் மடலினுள் சென்று அதன் உட்புறத்தில் தமது புழுக் கூண்டுகளை செய்துக்கொண்டு புழுப் பருவத்தை அவற்றினுள் போக்கிடும்.

**பதுளை மாவட்டத்தில் கரும்பு கம்பளிப் பேனால் பாதிப்பேற்பட்ட விவசாய நிலங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இயற்கை பாதுகாப்புப் பூச்சுகள்.**

கரும்பு கம்பளி ஏபிட்டுகளினால் அதிகமாக அழிவேற்பட்ட பதுளை மாவட்டத்தில் கஹடருப்ப பிரதேசத்தின் கரும்பு விவசாய நிலங்கள் தொடர்பாக பல கள பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் போது கரும்பு வூல் ஏபிட்டு உயிரியல்சார் ரீதியில் கட்டுபடுத்துவதற்காக உதவுகின்ற சிபிட் கொசுகள் இனமொன்றின் புழுப் பருவமொன்றை அவதானிக்கப்பட்டது. இவ் இயற்கை எதிர்வாதி இனம் கரும்பு விவசாயம் செய்கின்ற ஏனைய பிரதேசங்களில் காணக்கிடைக்காதமை முக்கியமானதாகும்.

**கரையான்களை கட்டுப்படுத்தல் தொடர்பான விதந்துரைத்தல்**

குரூசர் WS (தயோமெதொக்சாம் 70%) – lg/L விதை கரும்பு தர துண்டுக்களை 15 வினாடிகள் வீதமாக இரு முறைகள் 15 வினாடிகளின் இடைவெளியுடன் நடுவதற்கு முன்னர் இவ் இரசாயன திரவியத்தில் மூழ்க வைத்திருக்கவும்.

**இறக்குமதி செய்யப்பட்ட கரும்பு இனங்கள் தொடர்பான நோய்தடுப்பு**

பாகிஸ்தானில் இருந்து இந்நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 32 கரும்பு வகைகள் மற்றும் 59 வகைகளுடனான 2 தொகுதிகள் உரிய நோய்தடுப்பு செயற்பாட்டுக்கு உட்படுத்திய பின்னர் ஹந்தானை நோய்தடுப்பு நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

**கிருமி கட்டுபாட்டு சேவைகள்**

கரும்பு கம்பளி ஏபிட்டு உயிரியல் ரீதியில் கட்டுப்படுத்துவதற்காக இரசாயன கூடத்தினுள் வளர்க்கப்பட்ட டய்பா அபிடிவோரா மற்றும் மய்கிரோமஸ் இகொரோடஸ் எனும் இயற்கை எதிர்வாதி பூச்சிகளை கீழ் காணும் விதமாக வயலினுள் விடுவிக்கப்பட்டுள்ளது.

| இடம் | அளவு | |
|---|---|---|
| | டய்பா புழுக் கூண்டுகள் | மய்கிரோமஸ் புழுக்கள் |
| கஹட்டருப்ப | 2500 | 0 |
| புத்தல | 2800 | 575 |
| செவனகல | 2500 | 680 |
| ஹிங்குரானை | 650 | 750 |

தை முதல் பங்குனி வரையான காலப் பகுதியினுள் நாட்டின் அனைத்து கரும்பு விவசாய நிலப் பிரதேசங்களிலும் கம்பளி ஏபிட்டு அதிகமாக பரவி இருந்ததோடு மேலும் பரவுவதை தடுப்பதற்காக கரும்பு சீனி தொழிற்சாலைகளுக்குரிய மாதிரிகளை பெற்றுகொடுக்கப்பட்டது.

கரும்பு கம்பளி ஏபிட்டு கட்டுபாட்டுக்காக மிகவும் பொருத்தமான செயற்பாடாக கருதப்படும் உயிரியல் கட்டுபாட்டு இயற்கை எதிர்வாதி பூச்சுகள் கரும்பு வயலினுள் பெருக்க வைத்துக்கொள்வதற்காக தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டது.

பெல்வத்த சீனி உற்பத்திசாலையின் விதை கரும்பு படுக்கைகளில் ஏற்பட்ட மய்டா தொல்லையை கட்டுபடுத்துவதற்காக தேவையான அறிவுரைகளை வழங்கப்பட்டது.

கரும்பு கம்பளி ஏபிட்டு கட்டுப்பாடு தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் புத்தலை மற்றும் பசறை பிரதேசங்களில் நடாத்தப்பட்டது.

# நுண்ணுயிரியல் மற்றும் துணை விளை
# பொருள் உற்பத்திப் பிரிவு



**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திருமதி.எம்.கே.ஆர்.சில்வா BSc, MSc | பொறுப்பு ஆராய்வு அதிகாரி (2009 செப்டம்பர் முதல்) |
| திருமதி. ஏ.என்.டபிள்யூ.எஸ். துஸாரி BSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திருமதி. டபிள்யூ.எம்.பி. வீரக்கொடி BSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திருமதி. டபிள்யூ.எம்.எஸ். குமாரி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (08.04.2010 முதல்) |
| திரு. ஆர்.ஏ. பிரேமசந்திர | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. எம்.ஆர். பிரேமலால் | ஆய்வுக்கூட/கள உதவியாளர் |
| திரு. டி.எம்.டி. பியரத்ன | கள உதவியாளர் |

**ஆராய்வுகளின் நிரல்**

- பிரதான நோய்களை எதிர்த்தல் தொடர்பாக புதிய இனங்களின் பாதுகாத்தல்.
- பாகிஸ்தானால் இறக்குமதி செய்யப்பட்ட இனங்களை தொடர்பான நோய்தடுப்பு.
- கரும்பு மரத்தின் வேருகள் மற்றும் மரங்கள் சார்ந்த நைதரசன் பதிக்கும் பக்ரீரியா வேறுபடுத்தப்பட்டது.
- ஒன்பது (09) மதுவ மாதிரிகளை வேறுபடுத்தப்பட்டது.
- ஆறு (06) பக்ரீரியா மாதிரிகள் வேறுபடுத்திக்கொள்ளப்பட்டது.

**சாதனைகள் சுருக்கமாக**

**கறும் மண் நிற நோய் தடுப்புக்காக கரும்பு இனங்களை பரிசோதித்தல்.**
2002 ஆம் தொகுதியிலிருந்து 125 இனங்கள் 2003 தொகுதியிலிருந்து 74 இனங்கள் பிரிஸிலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 11 இனங்களின் இலை சுடு மற்றும் பயிர் நோய்களை தடுக்கப்பட்டது.

மேலும் இவ் இனங்களின் 2001, 2002 காண்டத்தின் 85 இனங்கள் மற்றும் 2005 ஆம் காண்டத்தின் இழைய வளர்க்கப்பட்ட மரபுத் தோற்றங்களின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும், 2004 காண்டத்தின் 102 வகைகள் மற்றும் 2004 காண்டத்தின் இழைய வளர்க்கப்பட்ட மரபுத் தோற்றங்களின் 28 இனங்கள் தொடர்பாக கள விவசாயங்கள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேலும், 1995, 1996, 2002 மற்றும் 2003 காண்டங்களை சார்ந்த கறு மண்நிற நோய் தொடர்பாக பரிசோதனைக்கு பாத்திரமாகாத 17 வகைகள் தொடர்பாக புதிதாக கள செய்கைகளை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 1995, 1996, 2002 மற்றும் 2003 காண்டங்களை சார்ந்த கறு மண்நிற நோய் தொடர்பாக பரிசோதனைக்கு பாத்திரமாகாத 10 வகைகள் தொடர்பாக புதிதாக கள செய்கைகளை மேற்கொள்ளப்பட்டது.

1999 தொகுதி, மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்னும் ஒரு சில கரும்பு இனங்களின் நோய்கள் தொடர்பாக காட்டுகின்ற எதிர்ப்புகளை பரிசோதிக்கும் தரவுகள் (உட்படாத),

(வெண் இலை நோய் தடுப்புத்தரவுகள்) இல்லாமலிருந்த பலதரப்பட்ட தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல வகைகளுக்கு (1989 தொகுதியின் 01 வகை, 1995 தொகுதியின் 05 வகைகள், 2002 ஆம் தொகுதியிலிருந்து 02 வகைகள் மற்றும் திசு வளர்க்கப்பட்ட மரபுத் தோற்றங்களின் 02 வகைகளுக்காக) புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

2000/2001 தொகுதியில் இருந்து 25 இனங்களின் நோய் தடுப்பு ஆராய்வுகளை ஸ்தாபிக்கப்பட்டன.

**கரும்பு இனங்களின் நோய் தடுப்புக் காப்பு**

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள (33) கரும்பு வகைகளை நோய்காப்பு நிலையத்தில் வைத்து நோய் தடுப்புக் காப்பு செய்யப்பட்டன. ஆயினும் இறக்குமதி செய்யப்பட்ட விதை கரும்பு மரங்கள் சிறந்த நிலையில் இருக்காததால் அவற்றிலிருந்து இரு வகைகள் மாத்திரம் தளிர்த்திருந்தது. பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள மேலதிக ஐம்பத்தியொன்பது (59) கரும்பு வகைகளை மார்கழி மாதத்தின் போது நோய் தடுப்பு காப்பு நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டு தடுப்புக் காப்பு அலுவல்கள் தொடர்பாக பராமரிக்கப்பட்டது.

**கரும்பு மரங்களுடன்கூடிய நைட்ரிஜன் உறுதிப்படுத்தும் பக்டீரியாக்களை தனிமைப்படுத்தல்.**

சியபலாண்டு உப நிலையத்தால் மற்றும் உடவளவை ஆராய்ச்சி பண்ணையால் பெற்றுக்கொண்ட இரு கரும்பு இனங்களால் நைதரசன் உறுதிப்படுத்தும் பக்டீரியாக்களை தனிமம் படுத்தப்பட்டது. இம் மேம்பட்டவைகளை மேலும் ஏகார் மூலத்தினுள்ளும் தனிமம் படுத்தப்பட்டுள்ளது. தனிமம் படுத்தப்பட்டுள்ள பதிண்மூன்று (13) வகைகள் அர்த்தாபல் ஏகார் மூலத்தினுள் நடுவப்பட்டது.

**மதுவ மாதிரிகளை தனிமம் படுத்தல்.**

பெல்வத்தை உற்பத்திசாலையினால் மற்றும் அதன் வடிசாலையினால் கரும்பு சருகுகள், வெல்லப்பாகு மற்றும் வடி சாகடை போன்ற மாதிரிகளை சேகரிக்கப்பட்டது. ஒன்பது (09) மதுவ மாதிரிகளை இவற்றிலிருந்து வேறுபடுத்தப்பட்டது.

**பொசுபரசு கரையக்கூடிய நிலைக்கு ஏற்படுத்தும் பக்டீரியா தனிமம் படுத்தல்.**

பெல்வத்தை உற்பத்திசாலையினால் மற்றும் அதன் வடிசாலையினால் பெற்றுக்கொண்ட கரும்பு சருகுகள் வெல்லப்பாகு மற்றும் வடி சாகடை மாதிரிகளின் பொஸ்பேடுகளை கரைத்திடும் ஆறு வகையான பக்டீரியா மாதிரிகள் தனிமம் படுத்தப்பட்டதோடு அடிப்படை பரிசோதனைகளால் அவற்றின் பொஸ்பேடு கரைத்திடக் கூடிய சக்தியை மதிப்பிடப்பட்டுள்ளது.

# பொறியியற் பிரிவு



**பதவியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. கே.எச்.டீ. அபேரத்ன BSc | ஆராய்வு பொறுப்பு அதிகாரி |
| திரு. எல்.எம்.ஜே.ஆர். விஜேவர்தன BSc | ஆராய்வு உத்தியோகத்தர் |
| திரு. ஏ.எஸ்.எம்.ஏ. பெர்னான்டோ | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. டபிள்யூ.எம். அனுரபால | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. வீ. அபேகுணவர்தன | வெல்டர் |
| திரு. ஜீ. ஆரியரத்ன | பிட்டர் |
| திரு. டபிள்யூ.ஏ. பிரேமசந்திர | கொல்லன் |
| திரு. எம்.பி. ரொஹான் | பட்டறை உதவியாளர் |
| திரு. எம்.டி. வீரசிரி | ஆய்வுக்கூட/கள உதவியாளர் |

**ஆராய்வுகளின் நிரல்**

**இயந்திரோபகரணங்கள்**

- துவி சக்கர உழவு இயந்திரத்தைக்கொண்டு உரம் செலுத்தியின் ஆராய்வு மாதிரிப் படிவத்தின் நிர்மாணிப்புப் பணிகள் வெற்றிகரமானதாக இறுதி செய்தல்.

**நீர் முகாமைத்துவம்**

- கரும்பு விவசாயம் தொடர்பாக நீர் வசதிகள் அளிப்பதற்கு ஓடும் மழை நீரால் பயன் பெறுதல்.
- இலங்கை கரும்புப் பண்ணைகள் தொடர்பாக மேல் முன்னேற்றப்பட்ட இலகு வீச்சு நீர் வினியோக அமைப்பு
- 2010 ஆம் ஆண்டுக்கான விவசாய காலநிலை தொடர்பான பகுப்பாய்வு.

**சேவைகள்**

- ஏனைய ஆராச்சிப் பிரிவுகளால் வேண்டப்படகின்ற இயந்திரோபகரணங்கள் தொடர்பான வேண்டுக்கொள்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.

**சாதனைகள் சுருக்கமாக**

உரம் செலுத்தியின் உரம் விழுவதை கட்டுபடுத்தும் ஒரு கருவியை உற்பத்தி செய்து உரிய வீதத்திற்கு அமைவாக களத்திற்கு உரம் விழுவதை கள பரிசோதனைகளால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இவ் இயந்திரம் கீழ் காணும் தன்மைகள் கொண்டுள்ளது.

i. இயந்திரத்தின் கட்டுபாடு பிரிவின் மூலம் களத்திற்கு உரம் விழுகின்ற போது உழவு இயந்திரத்தின் மாற்றமடைகின்ற வேகத்திற்கு அமைவாக களத்திற்கு விழும் உரம் அளவு சுயமான முறையில் கட்டுபடுத்தி உரிய உர வீதத்தை பராமரித்துப் போகப்படும்.

ii. செலுத்த வேண்டிய உர வீதம் மாற்றமடைகின்ற சந்தர்பங்களின் போது கியர் அமைப்பில் ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்தி உரம் செலுத்தியை மிக இலகுவான முறையில் அதற்காக அமைத்துக்கொள்ள இயலுமாதல்.

iii. எளிதான கருவியாக அமைதல் (உழவு இயந்திரத்தில் பொருத்துவதற்காக ஒருவர் போதும்)

iv. ஒரு ஹெக்டயாருக்கு 523 Kg செலுத்துகின்ற போது 140 மீட்டர் நீள இரு வரிசைகளுக்கு தேவையான உரத்தை ஒரே முறையில் தேவையான உரத் தொகையை இயந்திரத்தில் ஏற்ற இயலுமாதல்.

**ஓடும் மழை நீர் சேகரிக்கும் கருத்திட்டம்**

செவனகல பிரதேசத்திற்காக கொள்ளளவு சுமார் 125 முதல் 150$m^3$ அளவுடன் கூடிய நீர் தேங்கிகளை நிர்மாணிப்பது மிகவும் செய்முறைக்கு உகந்ததாக அமைவதோடு சேகரிக்கப்படும் நீரை குறை நீர் விநியோக முறைமைக்காக உபயோகித்துக்கொள்ள இயலுமென இனங்காணப்பட்டது. இந் நீர் சேகரிக்கும் அமைப்புகள், கரும்பு நிலங்களில் உயரம் குறைந்த கீழ் பாகத்தில் நிர்மாணித்துக்கொள்ள இயலுமானதோடு விவசாய கிணறுகளுடன் சமனான முறையில் உபயோகித்துக்கொள்வதால் உற்பத்தித்திறனை உயர்த்திக்கொள்ள இயலுமாகும். அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட விவசாய கிணறுகளில் நீர் அளவு வரை மற்றும் வரண்ட காலத்தின் போது பூமிக்கு வெளிப்புறத்தில் இருந்து 50 – 350 cm க்கு இடையில் வீழ்ச்சி அடைவதை காணக்கிடைப்பதோடு ஒரு முறை நீர் பெற்றுக்கொண்டதன் பின்னர் 3 – 7 நாட்கள் வரை காலத்தினுள் அதன் நீர் அளவு முன்னிருந்த நிலையை அடைவதாக கண்காணிக்கப்பட்டுள்ளது.

**மேல் முன்னேற்றப்பட்ட இலகு வீச்சு நீர் விநியோக அமைப்பு**

களத்தில் கொண்டு போவதற்கு மற்றும் பாவனையின் வசதிக்காக திட்டமிடப்பட்டுள்ள புதிய வீச்சு நீர் விநியோக அமைப்பின் பிரதான பகுதியான நீர் குழாய் இடும் பிரிவு வெற்றிகரமாக இறுதிபடுத்தியதோடு சுற்றப்படும் வீச்சு தலையுடன் கூடிய பாகத்தின் உறுதி அதற்குரிய ஆகக்கூடிய வேகத்தால் நீர் வீச்சுகின்ற போது உடைந்து விழுவதாகவும் காணக்கிடைத்தது. ஆகையால் அவற்றிற்குரிய ஒழுங்கமைப்பின் ஒரு சில மாற்றங்கள் தற்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

**விவசாய வானிலை**

| **மொத்த சொத்துக்கள்** | | | 386,419,888.00 | | 317,567,216.00 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | | |
| செலுத்தப்பட வேண்டிய | 8 | 5,212,598.00 | | 4,159,864.00 | |
| சேர்க்கப்பட்ட செலவீனங்கள் | 9 | 6,017,526.00 | 11,230,124.00 | 5,870,879.00 | 10,030,743.00 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | | | |
| தள்ளிப் போடப்பட்ட | | | | | |
| வருமானம் | 10 | 7,853,601.00 | | 1,183,755.00 | |
| பணிக்கொடை அளித்தல் | 11 | 30,020,313.00 | 37,873,914.00 | 28,688,562.00 | 29,872,317.00 |
| மொத்த பொறுப்புகள் | | | 49,104,038.00 | | |
| **மொத்த தேறிய சொத்துகள்** | | | 337,315,850.00 | | 277,664,156.00 |
| **தேறிய சொத்துகள்/ சமனான** | | | | | |
| திரண்ட நிதியம் | 12 | 145,285,139.00 | | 145,285,139.00 | |
| பொது ஒதுக்கு | 13 | 164,110,711.00 | 309,395,850.00 | 132,379,017.00 | 277,644,156.00 |
| | | | 27,920,000.00 | | |
| **மொத்த சொத்துகள்/ சமனான** | | | 337,315,850.00 | | 277,664,156.00 |

| எஸ்.கே.சிரில் சுதுவெல்ல | கலாநிதி என்.சி. குமாரசிங்க | டி.எம். சிரிபால |
|---|---|---|
| தவிசாளர் | பணிப்பாளர்-தலைமை நிர்வாகி | கணக்காளர் |

# கரும்பு ஆராய்ச்சி நிலையம்
## 31.12.2010 க்கு நிறைவுற்ற ஆண்டுக்கான
## நிதிசார் வினைத்திறன் கூற்று

| சொத்துகள் | குறிப்பு | 2010<br>ரூபா. | 2009<br>ரூபா. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு வருவாய்** | | | |
| கரும்பு இறக்குமதி மீதான செஸ் வரி | | 142,875,726.00 | 129,853,159.00 |
| ஏனைய வருவாய்கள் | 14 | 20,485,602.00 | 28,914,929.00 |
| | | 163,361,328.00 | 158,768,088.00 |
| **செயற்பாடு செலவீனங்கள்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 15 | 78,776,912.00 | 78,187,910.00 |
| பிரயாணமும் வாழ்க்கை உதவித் தொகையும் | | 1,703,617.00 | 1,574,319.00 |
| அளித்தல்களும் நுகரக்கூடிய பாவனைகள் | 16 | 1,731,477.00 | 1,297,704.00 |
| பராமரிப்பு | 17 | 1,827,313.00 | 14,109,718.00 |
| ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் | 18 | 12,143,898.00 | 17,433,170.00 |
| ஆராய்வுகளும் அபிவிருத்தியும் | 19 | 17,804,714.00 | 7,811,118.00 |
| தேய்மானங்களும் கடன் தீர்வுச் செலவீனங்களும் | | 5,623,630.00 | 10,842,328.00 |
| ஏனைய செயற்பாட்டு செலவீனங்கள் | 20 | 12,480,254.00 | 2,324,397.00 |
| மொத்த செயற்பாட்டு செலவீனம் | | 1,193,627.00 | 11,143.00 |
| | | 133,285,442.00 | 133,591,807.00 |
| செயற்பாட்டு ஏற்பாடுகளால் நிலவும் மிகை/(குறைவு) | | 30,075,886.00 | 25,176,281.00 |
| பராமரிப்புச் செலவு | | 146,607.00 | 188,811.00 |
| காணிகள், இயந்திரங்கள்,உபகரணங்கள் விற்பனை | | | - |
| நடைமுறை அல்லாத வருமான (செலவீன) தொகை | | 146,607.00 | 188,811.00 |
| வழமைக்கு மாறான வகைகளுக்கு முன்னர் மிகை/குறைவு | | 29,929,279.00 | 24,987,470.00 |
| கருதப்படும் காலப் பகுதிக்கான தேறிய மிகை/ (குறைவு) | | 29,929,279.00 | 24,987,470.00 |

| எஸ்.கே.சிரில் சுதுவெல்ல | கலாநிதி என்.சி. குமாரசிங்க | டி.எம். சிறிபால |
|---|---|---|
| தவிசாளர் | பணிப்பாளர்-தலைமை நிர்வாகி | கணக்காளர் |

## கரும்பு ஆராய்ச்சி நிலையம்

### 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான
### காசுப் பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்கள்** | **2010** | **2009** |
| சாதாரண செயற்பாடுகளிலிருந்து மிகை / (குறை) | 29,929,279.00 | 24,987,470.00 |
| **காசல்லா செயற்பாடுகள்** | | |
| தேய்மானம் | 12,480,254.00 | 10,842,328.00 |
| பணிக்கொடை ஏற்பாடு | 2,410,965.00 | 3,104,074.00 |
| முன்னைய ஆண்டு சீராக்கல் | 1,802,415.00 | (62,798.00) |
| மொத்த வருமானம் | 6,669,846.00 | (1,581,510,.00) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு இலாபம் (நட்டம்)** | **53,292,759.00** | **37,289,564.00** |
| கடன்பட்டோர் பெறுகைகளின் அதிகரிப்பு | (9,722,508.00) | (9,091,760.00) |
| தொகை பெறுகைகளின் அதிகரிப்பு | (347,082.00) | (1,379,843.00) |
| முடிவடையாத வேலைகளின் குறைவு | 8,202,600.00 | (8,820,121.00) |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/குறைவு | 55,703.00 | 539,469.00 |
| பதவியினருக்கான கடன்களின் குறைவு | 7,436,498.00 | (2,899,370.00) |
| கடனாளர்களின் மற்றும் ஏனைய கட்டணங்களின் அதிகரிப்பு | 1,199,381.00 | (4,853,341.00) |
| தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்து ஏற்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் | 60,117,351.00 | 10,892,198.00 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து (உபயோகிக்கப்பட்ட) காசு பாய்ச்சல்** | | |
| காணிகள், இயந்திரங்கள், இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் | (27,202,633.00) | (4,283,750.00) |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு பாய்ச்சல் | (27,202,633.00) | (4,283,750.00) |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து காசு பாய்ச்சல்** | | |
| பணிக்கொடை கட்டணங்கள் | (1,079,213.00) | (3,915,626.00) |
| நிதி செயற்பாடுகளிலிருந்து (உபயோகிக்கப்பட்ட) தேறிய காசு பாய்ச்சல் | (1,079,213.00) | (3,915,626.00) |
| காசு, காசு சமனிகளின் தேறிய அதிகரிப்பு (குறைவு) | 31,835,505.00 | 2,692,822.00 |
| ஆண்டாரம்பத்திலான காசும் காசு சமனிகளும் | 212,000,702.00 | 209,307,880.00 |
| ஆண்டிறுதியிலான காசும் காசு சமனிகளும் | **243,836,207.00** | **212,000,702.00** |
| **காசு, காசு சமனிகளின் மீதம் தொடர்பான பகுப்பாய்வு** | | |
| வங்கி மீதம் | 16,901,137.00 | 16,140,230.00 |
| திறைச்சேரி உண்டியல்கள் | 194,934,957.00 | 133,340,002.00 |
| காசு வைப்புகள் | 32,000,113.00 | 62,520,470.00 |
| | **243,836,207.00** | **243,836,207.00** |

# கரும்பு ஆராய்ச்சி நிலையம்

## 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிநிலைக்கான குறிப்புகள்

**1. காணிகள் மற்றும் இயந்திரங்கள்** **ரூபா.**

01 ம் அட்டவணையை தயவுசெய்து பார்க்கவும்

**2. முதலீடு (நெடுங் கால)**

| | |
|---|---|
| நிலையான வைப்புகள் (பணிக்கொடை நிதியம்) - தே.சே.வ. | 29,500,113.00 |

**பணிக்கொடை நிதியம்**

31.12.2010 ஆம் திகதிகான பணிக்கொடை ஏற்பாடுகள் ரூபா. 29500144/- இருப்பதுடன் 31.12.2010 ஆம் திகதியில் தேசிய சேமிப்பு வங்கியிலான பணிக்கொடை நிதியம் தொடர்பான முதலீடுகளின் பெறுமதி ரூபா. 30,020,313/- ஆகும். அதன் படி இவ் வங்கியிலையே பணிக்கொடை நிதியத்திற்குரியதாக ரூபா 520,199/- மீத பெருமதியும் 28.02.2011 ஆம் திகதியில் நிலையான வைப்புக்களில் வைக்கப்பட்டது.

**3. நுகர்வுக்கூடிய தொகை**

| | |
|---|---|
| எழுது கருவிகள் | 115,052.00 |
| வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | 1,359,770.00 |
| கட்டிடங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | 1,076,562.00 |
| அலுவலக உபகரணங்கள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | 387,033.00 |
| இயந்திரோபகரணங்கள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | 223,090.00 |
| எரிபொருள் | 102,794.00 |
| பூச்சு நாசினிகள் | 692,562.00 |
| நலன்நோம்புகை | 221,083.00 |
| உரம் | 1,174,860.00 |
| **மொத்த நுகர்வுக்கூடிய தொகை** | **5,352,815.00** |

**4. வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்கள்**

| | | |
|---|---|---|
| முற்பணம் | பிராந்திய கொள்வனவு | 77,406.00 |
| | நானாவித | 250,740.00 |
| | போக்குவரத்து | 700.00 |
| | எரிபொருள் | 30,302.00 |
| வட்டி வருவாய்கள் | நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி | 2,591,034.00 |
| | நிலையான வைப்பு - ம..வ | 72,305.00 |
| | திறைச்சேரி உண்டியல் - மக்கள் வங்கி | 8,120,521.00 |
| | திறைச்சேரி உண்டியல் - இலங்கை வங்கி | 2,859,144.00 |
| பதவியாளர்களின் கடன்கள் | வீடமைப்புக் கடன் (அட்டவணை 02) | 6,273,626.00 |
| | இடர் கடன் (அட்டவணை 03) | 18,856,747.00 |
| | பண்டிகை முற்பணம் (அட்டவணை 04) | 200,300.00 |
| | சைக்கிள் கடன் (அட்டவணை 05) | 51,242.00 |
| | மோட்டார் சைக்கிள் கடன் (அட்டவணை 06) | 2,340,368.00 |
| | புத்தகக் கடன் (அட்டவணை 07) | 6,000.00 |
| | கணனிக் கடன் (அட்டவணை 08) | 364,667.00 |

| | | |
|---|---|---|
| விசேட கடன்கள் | கந்தலை சீனி உற்பத்தி (தனி) நிறுவனம் | 3,000,000.00 |
| தொழில்சார் கடனாளிகள் | ஜனதா பர்டிலய்ஸர் | 250.00 |
| | வ.ப. கந்தலை சீனி உற்பத்தி (தனி) நிறுவனம் | 14,345.00 |
| | மேலதிக விவசாய போகங்கள் அமைச்சு | 1,801,100.00 |
| | றி.கே.றெனிசன் | 4,850.00 |
| **வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்களின் மொத்தம்** | | **46,915,647.00** |

## 5. முதலீடுகள் (குறுங்கால)

| | |
|---|---|
| திறைச்சேரி உண்டியல் - மக்கள் வங்கி | 113,313,579.00 |
| திறைச்சேரி உண்டியல் - இலங்கை வங்கி | 81,621,378.00 |
| நிலையான வைப்பு (புலமைப் பரிசில்) - தேசிய சேமிப்பு வங்கி | 500,000.00 |
| நிலையான வைப்பு – மக்கள் வங்கி | 2,000,000.00 |
| **மொத்த முதலீடுகள் (குறுங்கால)** | **197,434,957.00** |

## 6. முன் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வைப்புகள்

| | | |
|---|---|---|
| முன் கொடுப்பனவுகள் - | அனுமதிப்பத்திரங்கள் மற்றும் காப்புறுதி | 23,295.00 |
| | மருத்துவ உதவி | 8,501.00 |
| | இடைப் பணம் | 12,680.00 |
| | குத்தகை கூலி | 177,500.00 |
| | அலுவலக உபகரணங்கள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | 22,030.00 |
| ஏனைய வைப்புகள் | சி.பி. எல்லெபொல | 2,500.00 |
| | மின்சாரச்சபை | 150,100.00 |
| | வ.ப. எம்பிலிபிட்டிய கூட்டுறவுச் சங்கம் | 155,000.00 |
| | காஸ் சிலின்டர் | 118,375.00 |
| | எம்.என்.டபிள்யு அன்ட் ஆர்.எல்.பொனான்டோ | 70,000.00 |
| | எம்.டி.என்.நெட்வர்க் | 2,500.00 |
| | இரப்பர் ஆராய்ச்சி நிலையம் | 86,400.00 |
| | சொப்ட் லொஜிக் இன்போமேஸன் | 1,500.00 |
| | இலங்கை சுங்க அதிகார சபை | 10,000.00 |
| | துசித புதினப் பத்திரிகை | 2,000.00 |
| முன் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் மொத்தம் | | 842,381.00 |

## 7 காசு, காசு சமனிகள்

| | |
|---|---|
| மக்கள் வங்கி - உடவளவே - வங்கிக் கணக்கு இல. 101 | 2,801,087.00 |
| மக்கள் வங்கி - றத்மலானை - வங்கிக் கணக்கு இல. 080-1-001-5-1334359 | 2,817,351.00 |
| இலங்கை வங்கி - றத்மலானை - வங்கிக் கணக்கு இல. 272977 - 5 | 21,127.00 |
| மக்கள் வங்கி - உடவளவே - வங்கிக் கணக்கு இல. 1550021284 | 399,834.00 |
| சேமிப்புகள் - மக்கள் வங்கி - றத்மலானை - வங்கிக் க/ இ. 080-2-001-3-1334359 | 2,674,174.00 |
| மக்கள் வங்கி - உடவளவே - வங்கிக் கணக்கு இல. 295-2-001-7-0020749 | 2,687,564.00 |
| உடவளவைக்கு காசு மாற்றம்செய்தல் | 500,000.00 |
| **காசு, காசு சமனிகளின் மொத்தம்** | 16,901,137.00 |

## 8 செலுத்தப்பட வேண்டியவை

| | |
|---|---|
| ஏ.எஸ்.ஜயலத் | 600.00 |
| கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் | 590,000.00 |
| மீள செலுத்தப்படும் கேள்வி வைப்புகள் (அட்டவணை 09) | 359,750.00 |

| | | |
|---|---|---|
| இடை நிறுத்தல்கள் (அட்டவணை 10) | | 118,170.00 |
| இலங்கை சீனி கூட்டுத்தாபனம் | | 2,700,020.00 |
| பிரசாத் | | 892.00 |
| டபிள்யூ.ஜீ.நிமல் | | 833.00 |
| டி.எம்.என்.வீரசிங்க | | 250.00 |
| நிதி உதவி – பாகிஸ்தான் | | 123,043.00 |
| கே.மஹிந்தபால | | 1,188.00 |
| நுசித் குமாரதுங்க கம்பனி | | 18,000.00 |
| பிம்ரோ டையில் | | 106,177.00 |
| ஹெவி மெஷினர் டய்யர் பொயின்ட் | | 145,376.00 |
| ஹன்டர் கம்பனி | | 48,830.00 |
| ஜோன் கீல்ஸ் ஓ∴பீஸ் ஒடோ மேஷன் | | 27,800.00 |
| நந்தா டிரக்டர் மோடர்ஸ் (தனி) நிறுவனம் | | 14,260.00 |
| ஒகனிக் டிரேடர்ஸ் (தனி) நிறுவனம் | | 57,758.00 |
| பிரபாத் இன்டிரா டிரேடின் | | 48,352.00 |
| எஸ்.வீ.எம்.(தனி) நிறுவனம் | | 50,000.00 |
| சரத்சந்திர ஹோம் சென்டர்சரத் மோட்டர் இன்ஜினியரின் | | 96,910.00 |
| சரத் மோட்டர் இன்ஜினியரின் | | 20,250.00 |
| சுமனசிரி டிரேட் சென்டர் | | 25,096.00 |
| யூ அன்ட் எச் வீல் ஸர்விஸ் (தனி) நிறுவனம் | | 491,019.00 |
| யூ.ஜீ.ஸ்டோர்ஸ் | | 112,224.00 |
| வெனுர ஸ்டோர்ஸ் | | 1,300.00 |
| விக்கிரம ஹாட்வெயார் | | 10,500.00 |
| மோட்டார் வண்டி பதிவு திணைக்களம் | | 45,000.00 |
| **செலுத்த வேண்டிய செலவுகளின் மொத்தம்** | | **5,212,598.00** |

**9 அட்டுறு செலவுகள்**

| | | |
|---|---|---|
| கட்டட குத்தகை கூலி | 102,328.00 | |
| ஆலோசனை செலவுகள் | 8,500.00 | |
| மின்சாரம் | 240,624.00 | |
| எரிபொருள் | 127,091.00 | |
| புதுனப் பத்திரிகைகள் | 2,250.00 | |
| மேலதிக நேரம் | 233,381.00 | |
| குத்தகை கூலி | 18,846.00 | |
| தபால் கட்டணங்கள் | 10,200.00 | |
| வாகனங்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் | 64,802.00 | |
| பாதுகாப்பு செலவீனம் | 598,658.00 | |
| வாகனங்களுக்கான வரி செலுத்தல் | 23,325.00 | |
| தொலைபேசி கட்டணங்கள் | 126,421.00 | |
| பயணச் செலவுகள் மற்றும் வாழ்க்கை செலவுகள் | 27,871.00 | |
| நீர் கட்டணங்கள் | 2,943.00 | |
| சம்பளம் | 729,629.00 | 2,316,869.00 |
| ஊழியர் சேமிப்பு நிதியம் | | 1,053,790.00 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | | 126,455.00 |
| பதவியாளர்களின் மருத்துவ கொடுப்பனவுகள் (அட்டவணை 11) | | 2,360,606.00 |
| சம்பளம் மற்றும் வேதனங்களை குறைத்தல் | | 1,895.00 |
| தங்க வைத்துக்கொண்டுள்ள வரி | | 147,108.00 |
| சேர்க்கப்பட்ட பெருமதிகள் மீதான வரி | | 10,803.00 |
| **மொத்த அட்டுறு செலவுகள்** | | 6,017,526.00 |

**10 தாமதிக்கப்பட்ட வருவாய்கள்**

| | |
|---|---|
| மக்கள் வங்கியின் திறைச்சேரி உண்டியல்களுக்குரிய வட்டி | 4,793,576.00 |
| இலங்கை வங்கியின் திறைச்சேரி உண்டியல்களுக்குரிய வட்டி | 1,679,003.00 |
| நிலையான வைப்புகள் | 1,381,022.00 |
| தாமதிக்கப்பட்ட மொத்த வருவாய்கள் | 7,853,601.00 |

**11 பணிக்கொடை ஏற்பாடுகள்**

| | |
|---|---|
| அட்டவணை இல.12 தயவு செய்து பார்க்கவும் | 30,020,313.00 |

**12 திரட்டிய நிதியம்**

| | |
|---|---|
| அரசாங்கத்திடம் இருந்து பெற்ற மூலதன நன்கொடைகள் | 44,360,000.00 |
| UNDP/FAD உதவி | 474,116.00 |
| உலக வங்கி உதவி | 16,598,429.00 |
| ஜப்பானிய உதவி | 82,064,952.00 |
| அவுஸ்திரேலிய உதவி | 1,287,642.00 |
| சீனி இறக்குமதி சங்கத்தால் பெற்ற உதவி | 500,000.00 |
| **திரட்டிய நிதியத்தின் மொத்தம்** | **145,285,139.00** |

## கரும்பு ஆராய்ச்சி நிலையம்

### 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி செயற்பாடுகள் சார்ந்த குறிப்புகள்

| | | ரூபா. |
|---|---|---|
| 13 | **ஏனைய வருமானங்கள்** | |
| | ஊழியர்களின் கடன் மீதான வட்டி வருவாய், ஏனைய வருவாய்கள் | 2,720,942.00 |
| | திறைச்சேரி உண்டியல்கள் மீதான வட்டி | 15,892,500.00 |
| | நிலையான வைப்புகள் மீதான வட்டி | 3,613,231.00 |
| | வைப்புக் கணக்குகளிலிருந்து பெறப்படும் வட்டி | 258,929.00 |
| | **மொத்த ஏனைய வருமானங்கள்** | 20,485,602.00 |
| 14 | **பதவியணிக்குரிய செலுத்தல்கள் (வேதனாதிகள்)** | |
| | சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 46,982,603.00 |
| | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு | 8,323,437.00 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு | 1,664,688.00 |
| | மேலதிக நேர கொடுப்பனவுகள் | 3,848,601.00 |
| | வேதனங்கள் | 9,338,153.00 |
| | பதவியாளர்களின் மருத்துவ உதவி | 8,619,430.00 |
| | **பதவியணிக்குரிய செலுத்தல்களின் மொத்தம்** | 78,776,912.00 |
| 15 | **வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பாவனை** | |
| | ஆச்சுப் பதிவு மற்றும் எழுதுபகரணங்கள் | 1,661,777.00 |
| | புதுனப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 165,536.00 |
| | **வழங்கல்கள் மற்றும் நுகரக்கூடியதாக உபயோகித்தவையின் மொத்தம்** | 1,827,313.00 |
| 16 | **பராமரித்தல்** | |
| | வருமான அனுமதிப் பத்திரங்கள், காப்புறுதிகள் தகுதிச் சான்றுகள் | 703,730.00 |
| | வாகன திருத்தல்கள் மற்றும் பராமரித்தல்கள் | 3,127,928.00 |
| | கட்டிட திருத்தல்கள் மற்றும் பராமரித்தல்கள் | 2,953,666.00 |
| | அலுவலக உபகரணங்களை திருத்தல்கள் மற்றும் பராமரித்தல்கள் | 547,242.00 |
| | ஆய்வுக்கூட கருவிகளை திருத்தலும் பராமரித்தலும் | 1,481,830.00 |
| | எரிபொருளும் மசகெண்ணெய்யும் | 3,329,502.00 |
| | **பராமரித்தல் செலவீனத்தின் மொத்தம்** | 12,143,898.00 |
| 17 | **ஒப்பந்தம் அடிப்படையிலான சேவைகள்** | |
| | புதுனப் பத்திரிகை விளம்பரங்கள் | 143,354.00 |
| | தபால் செலவு | 119,304.00 |
| | வாடகை கூலி மற்றும் வரிகள் | 1,853,953.00 |
| | தொலைபேசி, தொலை நகல் மற்றும் வலைப்பின்னல் செலவு | 1,127,997.00 |
| | சட்ட செலவுகள் | 39,900.00 |
| | கணக்காய்வு கட்டணங்கள் | 250,000.00 |
| | மின்சாரம் | 3,686,150.00 |
| | நீர் | 48,043.00 |
| | பாதுகாப்புக் கட்டணங்கள் | 79,96,128.00 |
| | பணிக்கொடை | 2,410,965.00 |
| | போக்குவரத்து | 122,775.00 |
| | ஊழியர் இழப்பீடுகள் | 6,145.00 |
| | **ஒப்பந்தம் அடிப்படையிலான சேவைகளின் மொத்தம்** | 17,804,714.00 |

**18 ஆராய்வுகளும் அபிவிருத்தியும்**

| | |
|---|---|
| ஆராய்வுப் பொருட்கள் | 2,360,136.00 |
| சஞ்சிகை, வெகுசன ஊடக மற்றும் விளம்பர செலவீனங்கள் | 258,680.00 |
| பதவியாளர்களின் பயிற்சி | 100,802.00 |
| ஆலோசனைக்கான கட்டணங்கள் | 100,500.00 |
| கட்டுரைத் தொகுப்பு | 292,558.00 |
| கையாளப்பட்ட ஆராய்வுகள் | 105,090.00 |
| இரசாயனப் பொருட்கள் | 1,506,674.00 |
| உரம் | 738,075.00 |
| வேலி அடிக்கும் உபகரணங்கள் | 161,125.00 |
| **ஆராய்வுகள் மற்றும் அபிவிருத்தி செலவீனத்தின் மொத்தம்.** | 5,623,630.00 |

**19 ஏனைய தொழிற்பாடு செலவீனங்கள்**

| | | |
|---|---|---|
| பலவகையான | | 73,667.00 |
| விருந்துபசார செலவீனம் | | 28,584.00 |
| பதவியாளர் நலன்புரி | | 727,138.00 |
| அங்கத்துவ கட்டணங்கள் | | 12,348.00 |
| புலமை பரிசில்கள் | | 87,750.00 |
| வெள்ளிவிழா கொண்டாட்டம் | | 159,980.00 |
| மாற்றப்படும் காசு | | 9,436.00 |
| தீர்வுக் கட்டணங்கள் | | 16,529.00 |
| பணிப்பாளர் குழுசார் கட்டணங்கள் : தரசாளரின் வெகுமதி | 253,790.00 | |
| பதில் பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் | 80,000.00 | |
| பணிப்பாளர்களின் கொடுப்பனவுகளும் ஏனையவையும் | 44,405.00 | 378195.00 |
| **ஏனைய செயற்பாடு செலவீனங்களின் மொத்தம்** | | 1,193,627.00 |

## இணைப்பு – 1

## குறிப்பு

### அ. உடைமை, இயந்திரங்களும் இயந்திரோபகரணங்களும்

| | விபரம் | தே.வீ | 2010.01.01 க்கு செலவீனம் | மீள்மதிப்பீடு | சேர்மானம் | 2010.12.31 க்கு செலவீனம் | 10.01.01 க்கு தே.இ. | மீள் மதிப்பீடு | 2010 க்கான தேய்மானம் | 10.12.10 க்கு தே.இ. | 2010.12.31 க்கு தேறிய மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கட்டிடங்கள் | 15% | 53,293,700.00 | | 8,820,121.00 | 62,113,821.00 | 35,080,302.00 | | 2,286,829.00 | 37,367,131.00 | 24,746,690.00 |
| 2 | அலுவலக உபகரணங்கள் | 15% | 18,292,087.00 | | 1,606,512.00 | 19,898,599.00 | 13,766,611.00 | | 1,087,104.00 | 14,853,715.00 | 5,044,884.00 |
| 3 | பட்டறை உபகரணங்கள் | 15% | 17,822,107.00 | | 232,848.00 | 18,054,955.00 | 16,376,915.00 | | 368,720.00 | 16,745,635.00 | 1,309,320.00 |
| 4 | கள உபகரணங்கள் | 15% | 3,856,056.00 | | 119,040.00 | 3,975,096.00 | 2,966,503.00 | | 191,184.00 | 3,157,687.00 | 817,409.00 |
| 5 | நூலக புத்தகங்கள் | 15% | 2,800,705.00 | | | 2,800,705.00 | 2,377,191.00 | | 115,923.00 | 2,493,114.00 | 307,591.00 |
| 6 | ஆய்வுக்கூட உபகரணங்கள் | 15% | 65,888,504.00 | | 1,741,569.00 | 67,630,073.00 | 56,960,072.00 | | 2,281,734.00 | 59,241,806.00 | 8,388,267.00 |
| 7 | காணி அபிவிருத்தி | 15% | 8,615,220.00 | | 678,661.00 | 9,293,881.00 | 8,312,610.00 | | 133,327.00 | 8,445,937.00 | 847,944.00 |
| 8 | மரப்பொருட்கள் மற்றும் இணைப்பங்கங்கள் | 15% | 5,215,069.00 | | 686,910.00 | 5,901,979.00 | 4,347,142.00 | | 237,622.00 | 4,584,764.00 | 1,317,215.00 |
| 9 | விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி உபகரணங்கள் | 15% | 4,382,300.00 | | | 4,382,300.00 | 4,321,375.00 | | 15,810.00 | 7,337,185.00 | 45,115.00 |
| 10 | விவசாய உபகரணங்கள் | 15% | 13,015,949.00 | 1,416,605.00 | 75,290.00 | 14,507,844.00 | 11,430,493.00 | (6,138,395.00) | 276,804.00 | 5,568,902.00 | 8,938,942.00 |
| 11 | சைக்கிள்கள் | 15% | 134,190.00 | | | 134,190.00 | 131,715.00 | | 1,485.00 | 133,200.00 | 990.00 |
| 12 | மோட்டார் வாகனங்கள் | 15% | 38,775,182.00 | 12,041,582.00 | 13,221,775.00 | 49,955,375.00 | 30,048,382.00 | (22,406,582.00) | 5,421,676.00 | 13,063,476.00 | 16,891,899.00 |
| 13 | பீங்கான் கோப்பைகள் மற்றும் கரண்டி கத்திகள் | 15% | 755,522.00 | | 14,907.00 | 770,429.00 | 705,638.00 | | 41,307.00 | 746,945.00 | 23,484.00 |
| 14 | தொடர்பாடல் வசதிகள் | 15% | 1,606,011.00 | | 5,000.00 | 1,611,011.00 | 1,514,715.00 | | 20,729.00 | 1,535,444.00 | 75,567.00 |
| | | | **234,452,602.00** | **(624,977.00)** | **27,202,633.00** | **261,030,258.00** | **188,339,664.00** | **(28,844,977.00)** | **12,480,254.00** | **175,274,941.00** | **68,755,317.00** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } ඊඑල්/ජී/එස්ආර්අයි/2009/01
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2010 සැප්තැම්බර් 28 දින

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

எனது இல.:பீவை/ஜீ/எஸ்ஆர்ஐ/எ.ீ.ப்ஏ/2010 திகதி: 2011 செப்தம்பர் 14

தலைவர்,
கரும்பு ஆராய்ச்சி நிறுவகம்

**2010 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் நிதி அறிக்கை தொடர்பாக 1971 ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

தொடர் இலக்கம் மற்றும் 2011 ஆகஸ்ட் 25 ஆம் திகதி கடிதத்திற்கு இணைவாக.

02. மேற்படி கடிதத்துடன் செலுத்தப்பட்ட எனது அறிக்கையின் ஆங்கில மொழிப்பெயர்ப்பை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்: 1. செயலாளர் – சிறு ஏற்றுமதிப் போகங்கள் மேம்பாட்டு அமைச்சு
2. செயலாளர் – நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } ඊඑල්/ජී/එස්ආර්අයි/2009/01    ඔබේ අංකය / உமது இல / Your No. }    දිනය / திகதி / Date } 2010 සැප්තැම්බර් 28 දින

2011 ஆகஸ்ட் 25

பீவை/ஜீ/எஸ்ஆர்ஐ/எப்ஏ 2010

தலைவர்,

தென்னை ஆராய்ச்சி சபை

**கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடனும் 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஓர் விரிவான அறிக்கை 2011 யூன் 22 திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமாக கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව    சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை    INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2691151    ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2697451    ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத்தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், அவற்றின் ஒட்டு மொத்தமான முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல், என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக் கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன. இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்காக போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுவது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான முறையே ரூபா 6,472,579 மற்றும் ரூபா 1,381,022 தொகைகளான ரூபா 7,853,601 கூட்டுத்தொகையான 2011 ஆம் ஆண்டிற்கான வட்டி 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட பொறுப்புக்களின் கீழும் பெறவேண்டிய வட்டியின் கீழும் காட்டப்பட்டிருந்தன.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 2.3.1 பெறவேண்டிய கணக்குகள்

ரூபா 1,815,445 தொகையான கடன்பட்டோர் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக இருந்ததுடன் ரூபா 5,100 தொகையான கடன்பட்டோர் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

#### 2.3.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 2,700,020 தொகை 5 ஆண்டுகளுக்கு மேல் காணப்பட்டிருந்தும் அக்கடனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இன்மை

முறையே ரூபா 4,820,545 மற்றும் ரூபா 4,278,440 தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிராததன் காரணமாக அவற்றின் சரியான தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2005 திசெம்பர் 9 ஆந் திகதி 33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது நிறுவகத்தின் நிதியிலிருந்து ரூபா 32,000,113 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் ரூபா 29,929,279 மிகையினை விளைவித்துள்ளதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 24,987,470 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகள் ரூபா 4,941,809 தொகையால் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டின் செஸ் வருமானம் ரூபா 13,022,567 ஆல் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சியம்பலாண்டுவவில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவகத்தினால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அக்காணியின் சட்டரீதியான உரித்தை நிறுவகத்திற்கு ஒப்படைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஒரு மோட்டார் சைக்கிளும் ஒரு பயணிகள் பஸ் வண்டியும் கொள்வனவு செய்யப்படுவதற்கு முறையே ரூபா 3 மில்லியனுக்கும் ரூபா 3.5 மில்லியனுக்கும் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் இதனைக் கருத்திற்கொள்ளாது முறையே ரூபா 5 மில்லியனும் ரூபா 7.9 மில்லியனும் செலவிட்டு மேற்குறித்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை ரூபா 6.4 மில்லியனால் மிகைத்து செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்களும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களும்

ரூபா 02 மில்லியன் தொகையைச் செலவிட்டு தயாரிக்கப்பட்டிருந்த மீருட் அடுப்பு பயன்பாட்டிற்கு எடுக்காது விளைவற்றுக்காணப்பட்டது. இதற்குப் பதிலாக கருப்பஞ் சர்க்கரை உற்பத்திக்காக பாரம்பரிய அடுப்பு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சீனி உற்பத்தி மற்றும் இறக்குமதி

கரும்புப் பயிரீடு மற்றும் விளைச்சல் தொடர்பாகவும் அதன் மூலம் ஏதேனும் தயாரிப்புகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதன் மூலம் கரும்பு உற்பத்தியின் வினைதிறன் அதிகரிப்பது கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டதன் ஒரு பிரதான நோக்கமான போதிலும் மீளாய்வாண்டின் போது அந் நோக்கம் எய்தப்பட்டுள்ளதா என்பது சிக்கலானதாகக் காணப்பட்டது. உள்நாட்டு சீனி உற்பத்தியும் சீனி இறக்குமதியின் அளவும் தொடர்பான கடந்த 11 ஆண்டுகளின் தரவுகள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | உள்நாட்டு சீனி உற்பத்தி | இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு | சீனியின் மொத்த அளவு | சீனியின் மொத்த அளவில் உள்நாட்டு சீனி உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | மெட்ரிக் தொன் | மெட்ரிக் தொன் | மெட்ரிக் தொன் | % |
| 2000 | 48,000 | 562,000 | 610,000 | 7.87 |
| 2001 | 64,000 | 420,000 | 484,000 | 13.22 |
| 2002 | 39,000 | 554,000 | 593,000 | 6.58 |
| 2003 | 54,000 | 509,000 | 563,000 | 9.59 |
| 2004 | 60,000 | 438,000 | 498,000 | 12.05 |
| 2005 | 54,000 | 418,000 | 472,000 | 11.44 |
| 2006 | 56,000 | 525,000 | 581,000 | 9.64 |
| 2007 | 30,000 | 481,000 | 511,000 | 6.24 |
| 2008 | 39,000 | 575,000 | 614,000 | 6.35 |
| 2009 | 32,000 | 467,000 | 499,000 | 6.41 |
| 2010 | 31,500 | 559,000 | 590,500 | 5.33 |

மேற்குறித்த தரவுகளின் பிரகாரம், இலங்கையில் சீனிக் கைத்தொழில் 04 தசாப்தங்களுக்கு அதிகமாகக் காணப்பட்ட போதிலும் உள்நாட்டு சீனி உற்பத்தியானது நாட்டின் மொத்த சீனி தேவைப்பாட்டின் ஏறத்தாழ 7% அளவிலான குறைந்த அளவு பங்களிப்பைச் செய்திருந்தமை கடந்த 04 ஆண்டு கால தரவுகளில் இருந்தான அவதானிப்புகளில் தெளிவாகியுள்ளன.

### 3.5 செயற்திட்டத்தினை அமுல்படுத்தல்

(அ) மீளாய்வாண்டின் போது கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 25,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டம் முற்றாக கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தில் அமுல்படுத்தப்பட்ட பின்வரும் செயற்திட்டங்களின் செயலாற்றல் மிகவும் குறைந்த மெறுமதியினைக் கொண்டிருந்தன விபரம் பின்வருமாறாகும்.

| செயற்திட்டம் | பாதீட்டின் பிரகாரமான ஒதுக்கீடு<br>ரூபா | 2010.12.31 இல் உள்ளவாறான உள்ளபடியான வருமானம் செலவினம்<br>ரூபா | நிதிசார் செயலாற்றல்<br>ரூபா |
|---|---|---|---|
| கரும்புப் பயிர்கள் மற்றும் தண்டுகளின் விற்பனை | 1,500,000 | 487,585 | 33 |
| உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | | | |
| ஆராய்ச்சிப் பொருட்கள்<br>பசளை<br>ஏனையவை | 6,585,000 | 3,234,853 | 49 |
| பதவியணியினரைப் பயிற்றுவித்தல் | 500,000 | 70,564 | 14 |

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பதவியணி
(இ) செயற்திட்ட அமுலாக்கம்
(ஈ) சொத்துக்களின் பயன்பாடு

**ஒப்பம் : எச்.ஏ.எஸ் ஸமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 31 திசெம்பர் 2010 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் நிதி அறிக்கை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.**

**2.2 நிதி அறிக்கை தொடர்பாக கருத்து கூறல்.**

**2.2.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்.**

2011 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு காட்டி தந்துள்ளவாறு திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான சொத்துகள் தொடர்பாக கணக்கு வருடத்திற்கு தொடப்புப்பட்டதாக வட்டியை கணக்கிட்டு பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**2.3.1 பெற வேண்டிய கணக்குகள்**

01 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 1,315,445/- மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 5100/- கடன்பட்டோர் மீதங்கள் ஆளுகை சபை அனுமதியைப் பெற்று வருங்காலத்தின் போது கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

தற்போதைய சந்தர்ப்பத்தில் இலங்கை சீனி கூட்டுத்தாபனத்தை சாத்தப்பட்டுள்ளதால் ரூபா 2,700,020/- ஆகிய பணத் தொகையை அந் நிறுவனத்திற்கு செலுத்திட இயலாமற் போயுள்ளது. இதன் பிரகாரம் மேற் கூறிய தொகையை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு 2010.10.29 ஆம் திகதி நடாத்தப்பட்ட BP/2010 ஆளுகை சபை கூட்டத்தின் அனுமதியைப் பெற்று 2010.12.08 ஆம் திகதி இணை அமைச்சு மூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அங்கீகாரம் இது வரை எம்மிடம் கிடைத்ததில்லை.

**2.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சாட்சிகள் இன்மை.**

கடன்பட்டோர் மற்றும் கடன் வழங்கியோர் தொடர்பான தகவல்கள் நிறுவனத்தில் இருப்பதோடு ஆண்டிறுதியில் மீதங்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் நிறுவனத்தால் அவர்களிடம் செலுத்தப்பட்டிருப்பினும் எம்மிடம் மீதங்களை உறுதிப்படுத்தி கடிதங்கள் செலுத்தப்பட்டிருப்பது 17 நிறுவனங்கள் மாத்திரமே.

**2.5 சட்டத் திட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை**

2010 ஆம் ஆண்டில் முதலீடு செய்வதற்காக திறைச்சேரியின் அங்கீகாரத்தை பெற்றில்லை. கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 1981 இலக்கம் 75 கொண்ட சட்டத்தின் மூலம் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் பெயரில் நிதியமொன்றை பராமரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆளுகை சபையின் அங்கீகாரம் BP 70/2010 மூலமாக அது தொடர்பாக பெற்றுக்கொண்டுள்ளது.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாடு மீளாய்வு

### 3.2 சர்ச்சைக்கு காரணமாகும் கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சியபலாண்டில் 05 ஏக்கர் நிலத்தை மடுகம கிராம சேவகரால் ஆராய்ச்சி அலுவல்கள் தொடர்பாக கரும்பு ஆராய்ச்சி நிலையத்திடம் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. இது வரை பொறுப்பளிக்கப்படவில்லை. பிரதேச செயலாளரிடம் (சியபலாண்டு) வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளை உபயோகித்து 5 மில்லியன் ரூபா செலவில் குரு கப் வண்டியொன்று மற்றும் 7.9 மில்லியன் ரூபா செலவில் பஸ் வண்டியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும், தேசிய வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தால் அனுமதிக்கப்பட்டிருப்பது குரு கப் வண்டிக்காக 3 மில்லியன் ரூபா மற்றும் பஸ் வண்டிக்காக 3.5 மில்லியன் ரூபா மாத்திரமே. இப் பணத் தொகை போதாதென அறிவித்து இணை அமைச்சிடம் 2009.12.22 ஆம் திகதி அது தொடர்பான அனைத்து ஆவணங்களுடன் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இவ் வேண்டுக்கோள் அமைச்சினால் வரவு செலவு பணிப்பாளர் நாயகத்திடம் செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக திறைச்சேரியின் கேள்விக்கு பதிலாக ஆவணிப்பு அங்கீகாரத்தை கோரப்பட்ட போதிலும் பதிலாக சரியான முறையில் செயற்படுவதாக அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது.

### 3.3 பலனற்ற சொத்துக்கள் மற்றும் ஊன உபயோக சொத்துக்கள்

கருப்பட்டி உற்பத்திக்காக ஆராய்வு அலுவல்களை பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட இவ் அடுப்பு பலதரப்பட்ட தொழில்நுட்ப சிக்கல்களுடன் இருப்பினும் அதனை ஒழுங்குப்படுத்தி சுறுசுறுப்பான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 3.4 சீனி உற்பத்தி மற்றும் எதிர்காலம்

கரும்பு ஆராய்ச்சி நிலையத்தை ஸ்தாபிக்கும் சட்டத்தின் பிரகாரம் கரும்பு சீனி உற்பத்தியின் உற்பத்தித்திறனை உயர்த்துவது நிலையத்தின் ஒரு நோக்கமாகும். ஆகையால் மறைமுகமான முறையில் சீனி உற்பத்தியை உயர்த்துவதற்கு பங்களிப்பது எமது நிறுவனத்தின் பொறுப்பாகும். சென்ற 04 தசாப்த காலத்தினுள் நாட்டின் சீனி தேவையிலிருந்து சுமார் 7% ம் பங்களிப்பை மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதானமானதாக 2 சீனி உற்பத்திசாலைகள் இயங்குவதோடு அவை தனியார் துறை சார்ந்ததாக இருப்பதால் சீனி உற்பத்தியை உயர்த்துவதற்காக நேரடி தாக்கத்தை ஏற்படுத்திட கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு முடிவதில்லை. உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதற்காக கரும்பு விவசாயிகளை அறிவூட்டல், தேவையான தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுத்தல் மற்றும் கரும்பு உற்பத்திசாலைகளுக்கு தேவையான தொழில்நுட்பத்தை பெற்றுக் கொடுப்பதும், தேவையான அறிவுரைகளை வழங்குவதும் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தால் செய்து வருகிறது.

### 3.5 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(அ) கேட்போர் கூடத்திற்காக ரூபா மில்லியன் 25 ஒதுக்கப்பட்டு இருந்தப் போதிலும் அப்போதைய கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு தொடர்புப்பட்டிருந்த இணை அமைச்சினால் கேட்போர் கூடத்திற்கு பதிலாக ஆராய்வுக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டதால் இந் நிதி ஏற்பாடுகளை உபயோகித்திட இயலவில்லை. அந் நிதி ஏற்பாடுகளை 2011 / 2012 ஆம் ஆண்டுகளின் போது அவ் விடயம் தொடர்பாக உபயோகித்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) நிறுவனத்தினுள் செயற்படுகின்ற கீழ் காணும் கருத்திட்ட செயற்பாடுகளின் நிதிசார் வினைத்திறன் மிகக் குறைந்த மதிப்பை கொண்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது,

கரும்பு விதைகள், மரங்கள் விற்பனை - இது மூலம் ரூபா மில்லியன் 1.5 ம் வருமானத்தை எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ரூபா 487,585/- மாத்திரமே கிடைத்திருப்பதோடு நிதிசார் வினைத்திறன் 32.5% ம் மாத்திரமே. இது அதிகதரமான ஒதுக்கீடாக இருப்பதோடு சென்ற ஆண்டுக்கு ஒப்பானதாக கவனத்திற்குக் கொண்டு பார்க்கின்ற போது கரும்பு விதை விற்பனை செய்வதை விட கரும்பு விவசாயிகளுடன் இணைந்து கன்று நடுகைகளை பராமரித்துப் போவதால் இக்கரும்பு விதைகள் விவசாயிகளிடம் இலவசமான முறையில் பகிர்ந்தளிப்பதால் இவ் வருமானம் கைவிட்டு போயிருப்பதோடு 05 அபிவிருத்தி அலுவலகங்களால் தொடர்புப்பட்ட உத்தியோகத்தர்களை பசறை, புத்தலை, சியபலாண்டு, ஹிங்குரானை மற்றும் செவனகல பிரதேசங்களில் கன்று விதை மேடைகளை நடாத்தி போகப்படுகிறது. வானிலை மற்றும் ஏனைய ஏதுகள் காரணமாக அறுவடை பரிக்கும் செயற்பாடுகளும் தாமதமடைததால் கரும்பு மரங்கள் விற்பனை 2010 ஆம் வருடத்தின் போது வருமானத்துடன் சேரவில்லை. ரூபா. 477,271/-, 2011 ஆம் ஆண்டின் போது கரும்பு மரங்கள் விற்பனை செய்வதால் வருமானத்திற்கு சேர்ந்துள்ளது.

**உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

**ஆராய்வுப் பொருட்கள், உரம், ஏனைய** - 49% ம் உபயோகஞ் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுகளின் போது உரம் தொகைகள் மீதமாகி இருந்ததால் 2010 ஆம் ஆண்டுக்கு தேவையான அளவை மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

**சேவையணி பயிற்சியளித்தல்** - சேவையினரை பயிலவிப்பதற்காக 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உபயோகித்திருப்பது 14% மாத்திரமே. எதிர் வரும் ஆண்டின் போது பயிற்சியளித்தல் துறைசார் பயனுடைய வளர்ச்சியை எதிர்பார்க்கப்படுகின்றது.

### 04. அமைப்புகள் மற்றும் நிர்வாகம்

அ,ஆ,இ,ஈ இல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாக துறைகள் தொடர்பாக எனது கவனத்தை செலுத்தப்பட்டுள்ளது.

# 2005 முதல் 2009 வரையான நிதிசார் விசேட அம்சங்கள்

**வருமானம்**

| விபரம் | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|
| | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** |
| மீதான செஸ் (சீனி இறக்குமதி/உற்பத்தி) | 60.88 | 135.23 | 138.03 | 134.80 | 129.85 |
| வட்டி வருமானம் மற்றும் நானாவித வருமானம் | 11.85 | 13.44 | 13.28 | 35.52 | 28.14 |
| கரும்பு விற்பனை | - | 0.32 | 0.42 | 2.01 | 0.78 |
| மொத்தம் | 72.73 | 148.99 | 151.73 | 172.33 | 157.77 |

**செலவீனம்**

| விபரம் | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|
| | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** |
| **மீண்டெழுபவை** | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 4.14 | 58.47 | 71.84 | 73.23 | 78.19 |
| பிரயாணமும் வாழ்க்கை உதவித் தொகையும் | 0.55 | 1.09 | 1.02 | 1.49 | 1.57 |
| ஆராய்வுகளும் அபிவிருத்தியும் | 3.95 | 9.29 | 3.67 | 4.37 | 7.81 |
| ஆளித்தல்களும் நுகர்வுகளும் | 2.03 | 0.62 | 3.63 | 3.61 | 1.30 |
| ஒப்பந்த சேவைகள் | 59.78 | 15.45 | 15.17 | 18.90 | 17.43 |
| பராமரித்தல் | 3.71 | 5.85 | 7.45 | 11.40 | 14.11 |
| ஏனைய செயற்பாட்டு செலவீனங்கள் | 0.30 | 1.01 | 1.44 | 1.78 | 2.32 |
| நிதிசார் செலவீனங்கள் | - | 0.08 | 0.12 | 0.17 | 0.19 |
| மொத்தம் | 74.46 | 91.95 | 104.35 | 114.95 | 122.93 |
| | | | | | |
| **மூலதனம்** | | | | | |
| கட்டிடங்கள் | 0.03 | - | 0.48 | 2.12 | - |
| அலுவலக/ஆய்வுக்கூட/கள உபகரணங்கள் | 2.00 | 3.06 | 3.46 | 10.38 | 2.68 |
| வாகனங்கள் | - | - | 15.28 | - | 1.09 |
| காணி அபிவிருத்தி | - | - | 0.15 | 0.03 | 0.13 |
| நூலக புத்தகங்கள் | 0.37 | - | 0.38 | - | - |
| தளபாடங்கள் | 0.03 | 0.21 | 0.07 | 0.35 | 0.36 |
| ஏனைய வசதிகள் | 0.02 | 0.08 | 0.06 | 0.14 | 0.03 |
| மொத்தம் | 2.45 | 3.36 | 19.90 | 13.03 | 4.28 |
| **முழு மொத்தம்** | 76.91 | 95.31 | 124.25 | 127.98 | 127.21 |